அடக்கம்.

		பக்கம்.
1.	பத்திராதிபர் குறிப்புகள்	219
2.	புத்தூர் தாலுகா பஞ்சாயத்து மகாநாடு	226
3.	ஜி. ஓ. நெம்பர் 2080, L. & M.	230
4.	விவசாயிக்குத் தெரியவேண்டும் விஷயங்கள்	240
5.	விவசாயமே உயிர்த்தொழில்	240
6.	கொவ்வூர் டிவிஷன் பஞ்சாயத்துக்களின் மகாநாடு ...	243
7.	விவசாயிகளின் சங்கங்கள்—அவைகளின் தேவை ...	245

சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் 2.

மற்றவர்களுக்கு ... „ 3.

தனிப்பிரதி ... அணா 4.

8 AUG 1931

விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை சாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1]

இனம்! "போஜன விதி" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, சென்னை.

நாமே உயிர்த்தோழர்கள்

20 நாளைக்கு ஒரு ரூபாய் பெற்று தினம் இரண்டு வேளை உம்முடைய வியாதிகளை அப்புறப்படுத்தி உம்முடைய வாழ்நாளை நன்னாட்களாய்க் கழியும் படி செய்ய

மதனசஞ்சரி டானிக்

என்னும் பெயருடன் உலாவும் தமையனும் வந்த வியாதிகளைத்தீர்க்கவும் வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கவும் வேண்டிய வழிகாட்டி

வைத்திய வித்தியா

என்னும் பெயருடன் இலவசமாய் கிடைக்கும் தம்பியுமேயாம். எழுதுங்கள்

மதனமஞ்சரி பார்மஸி

1/94, சீனா பஜார், மதருஸ்.

கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1931௵ ஜூலை [இலக்கம் 10.

உலக வாழ்வு—பாரத தேசத்தின் ஸ்தானம்.

II.

சென்ற இதழில் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி நாம் எழுதியுளோம். இது உலகத்திலுள்ள இதர தேசங்களோடு இந்தியாவிற்குள்ள சம்பந்தத்தில் ஒரு பாகமேயாம். நமது நாட்டிற்கும் கிரேட் பிரிட்டனுக்கும் அரசாங்க விஷயத்தில் மிகவும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஆனால் இதற்கடுத்த படியாக பிரதானமான சம்பந்த விஷயமென்னவெனின் இந்த இரண்டு இராச்யங்களுக்குமுள்ள வியாபாரமாகும். இதே மாதிரி நமது தேசத்திற்கும் தற்காலத்தில் உலகத்திலுள்ள எல்லா இராஜியங்களைக் காட்டிலும் சக்தி வாய்ந்த அமெரிக்கா ஐக்கிய நாட்டிற்குமுள்ள சம்பந்தத்தை ஆராய்ச்சி செய்வதால் நமது தேச வாழ்வின் வெகு பிரதான விஷயங்களில் சிலவற்றை நாம் கவனிக்கலாம்.

இந்தியாவின் இயற்கை அமைப்புகளையும் ஐக்கிய நாடுகளின் இயற்கை அமைப்புகளையும் கவனிக்குமளவில் அவை அனேகமாக ஒன்றுபோலவேயிருக்கின்றனவென்பது புலப்படும். இரண்டு இராச்யங்களிலும் பெரிதான மலைகளும் நதிகளும் காடுகளும் இருக்கின்றன. இரண்டு இராச்யங்களிலும் ஒரேவிதமான பொருள்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. உற்றுப் பார்க்கும்பொழுது பயிர் செய்யும் ஸ்தலங்களின் அளவுபோன்ற விஷயங்களில் கூட வெகு சாம்யம் நாம் காணலாம். ஐக்கிய நாட்டிற்கு 139,321 000 ஹெகடர்களும்* இந்தியாவிற்கு (பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் உட்பட) 155,234,000 ஹெகடர்களும் இருக்கின்றன. இவ்விதம் அடிமையான நமது இராஜ்யத்தை உலகத்திலுள்ள ஒப்பற்ற இராஜ்யமான ஐக்கிய நாடுகளோடு சாம்யப்படுத்துவது நமது கர்வைக் காண்பிக்குமென்று சிலர் எண்ணலாம். ஆனால் சுயராஜ்யம்

*ஹெகடர்=2·471 ஏக்ராக்கள்.

1m211,N30
N31-1 42

லபித்தால் நமது நாட்டை சீர்திருத்த யதேச்சாதிகாரம் நமக்குக் கிடைக்கும். அப்பொழுது கட்டாயமாக தற்காலத்தில் மிகவும் பிரதாபத்திலிருக்கும் ஐக்கிய நாட்டிற்கு சமானமாக நாமும் நமது நாட்டை மாற்றிவிடலாமென்பதில் சற்றும் சந்தேகப்படவேண்டியதில்லை.

ஒரு காலத்தில் இப்பதவியை நாம் அடையலாமென்று கூறியதிலிருந்து தற்காலத்தில் அப்பதவியின் முதல் படியில் கூட நாம் ஏறிவிடவில்லையென்பதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது. ஐக்கிய நாட்டிற்கும் நமது தேசத்திற்கும் பொதுவாகவுள்ள விஷயங்களைக் கவனித்துப்பார்க்குமளவில் நமது தேசத்தின் அபிவிருத்திக்கு எத்தகைய தடைகள் இருக்கின்றனவென்பது நன்கு புலப்படும்.

ஒரு தேசம் க்ஷேமமாகவும் அபிவிருத்தியோடும் இருக்கிறதென்று கூறவேண்டுமானால் அது அநேக விஷயங்களில் அபிவிருத்தியடைந்திருக்கவேண்டும். விவசாயம், ரசாயனசம்பத்து, கைத்தொழில் இவைகளெல்லாவற்றிலும் அபிவிருத்தி அடைந்திருக்கும் இராஜ்யத்தைத் தான் தனது தேசிய வாழ்வை சக்தியுடன் நடத்தத் திறமையுடைத்ததென்று நாம் கூறலாம். இந்தியாவின் உண்மையான நிலைமை என்னவென்று உணர்வதற்கு இவ் விஷயங்கள் ஒவ்வொன்றையும் நாம் கவனிக்கவேண்டும். பிறகு இந்தியாவையும் ஐக்கிய நாட்டையும் சாம்யப்படுத்திப் பார்க்கவேண்டும். முன்னொரு காலத்தில் விவசாய நாடுகளில் முதல் பதவியை இந்தியா அனுபவித்துக் கொண்டிருந்ததற்கு பாரத மக்கள் தம்மை மெச்சிக்கொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுதோ ஐக்கிய நாட்டிற்கே இப் பதவி யிருக்கின்றது. இந்தியாவும் ஐக்கிய நாடுகளும் உலக வியாபாரத்திற்காக அநேகம் பொருள்களைப் பொதுவாக சாகுபடி செய்கின்றன. எனினும். கோதுமை. ஓட்ஸ், பார்லி, சோளம், பருத்தி, பருத்திக்கொட்டை, புகையிலை முதலியவைகளை உற்பத்தி செய்வதில் ஐக்கியநாடே முதல் பதவியிலிருக்கின்றது. நெல், தினை, இந்த இரண்டு சாமான்கள் விஷயத்தில் மட்டுமே இந்தியா இப்பொழுதும் முதல் பதவியிலிருக்கின்றது. நெல் விஷயத்தில் இந்தியாவிற்கு பிரதம பதவி கிடைத்திருப்பது பர்மாவையும் அதோடு சேர்த்திருப்பதாலாகும். கோதுமை உற்பத்தி செய்யும் இராஜ்யங்களில் பிரதானமானதென்ற பதவியைக் கொஞ்சம் கொஞ்சமாக நாம் இழந்துகொண்டு வருகிறோம். ருஷியாவும் ஆர்ஜண்டினாவும் அதிகம் முன்னேற்றமடைந்திருக்கின்றன. கோதுமை சாகுபடி செய்யும் இராஜ்யங்களில் இந்தியா ஐந்தாவதாகும். தானியங்களை சாகுபடி செய்வதில் கூட ருஷியாவும், ஆர்ஜண்டினாவும் முன் வந்து விட்டன. நாம் ஐந்தாவதாகத் தானிருக்கிறோம். ஒட்டு தானியத்தில் நமக்கு பங்கே கிடையாது. பார்லியிலும் நமது ஸ்தானம் ஐந்தாவது தான். (Flax) சணல் உற்பத்தியில் ஆர்ஜண்டினாவும், ஐக்கிய நாடுகளும் நம்மை விட முன் வந்துவிட்டன. பருத்தி சாகுபடி செய்வதில் நாம் முன்போலவே

இருக்கிறோம். ஐக்கிய நாட்டிற்கடுத்தது நமது ஸ்தானம். எகிப்து, சீனு, ருஷியா இந்த தேசங்கள் நமக்கு பிறகில்தான் இருக்கின்றன. ஆனுல் பருத்தி சாகுபடி செய்வதில் நாம் ஒன்று கவனிக்கவேண்டும். எகிப்தில் எச்சாவுக்கு 431 பவுண்டும், ருஷியாவில் 250 பவுண்டும், சீனுவில் 207 பவுண்டும், ஐக்கிய நாட்டில் 150 பவுண்டும் அறுவை செய்யப் படுகின்றன. இந்தியாவில் நாம் 90 பவுண்டே ஏக்ரா ஒன்றுக்கு உற் பத்தி செய்கின்றோம். பருத்தியின் குணத்தைக் கவனிக்குமளவிலும் ஐக்கிய நாடும், எகிப்து தேசமும் நம்மை விட எத்தனையோ தடவை மேம்பட்டவைகள். எனினும், ஐக்கிய நாடுகள் கண்ணும் கருத்துமாக வே யிருக்கின்றன. இவ்விஷயமாக மிகவும் நவீன அமெரிக்கா விவசாய வருஷ பஸ்தகத்திலுள்ள ஒரு வாசகத்தைக் கவனிப்போம். அதில் கூறுவதாவது :—"இந்தியர்கள் பருத்தியை அதிக உற்பத்தி செய்யும் பொழுதும் துணிகளை உபயோகிப்பவர்கள் அவர்களின் அவசியங்களை மாற்றும்பொழுதும் அவைகளைப்பற்றி அமெரிக்காவில் சாகுபடி செய்ய வர்களைக் கூடிய சீக்கிரத்தில் எச்சரிக்கை செய்யவேண்டும்." சர்க்கரை உற்பத்தியில் நமதுபதவியை நாம் இழந்துவிட்டோம். கூபாவிலும் பிலிப் பையினிலும் அதிகமாக கரும்புகள் பயிரிடப்படுகின்றன. கரும்பு உற் பத்திசெய்யும் இராஜ்யங்களில் நாம் மூன்ருவதாகவிருந்தாலும் 900,000 டன் சர்க்கரை இதா இராஜ்யங்களிலிருந்து நாம் இறக்குமதி செய்கின் ரோம். புகையிலை உற்பத்தி செய்வதில் நாம் இரண்டாவதாகும். இதி லும் வருஷா வருஷம் அமெரிக்காவிலிருந்து 5,884,000 பவுண்டு சுத்தி செய்த புகையிலையை நாம் இறக்குமதி செய்கின்ரோம். நிலக்கடலைப் பயிரில் நாம் எல்லோரைக் காட்டிலும் பிரதானமாகவே இருக்கிரோம். ஐக்கிய நாடுகளின் நிலக்கடலை உற்பத்தி முழுதும் சேர்ந்து 930,700,000 பவுண்டாகும். நமது ஏற்றுமதியோ 1,676,871,000 பவுண்டுகள். மேலும் நமது இராஜ்யத்தில் விளையும் நிலக்கடலையில் ஒரு முக்கிய பாகத்தை நாமே உபயோகிக்கிரோம். தேயிலை வியாபாரத்தில் இந்தியா இரண்டா வது இராஜ்யம். இவ்விஷயத்தில் ஐக்கிய நாட்டை கவனிக்கவேண்டிய தில்லை. அந்த தேசத்துக்கு நம்மிடத்திலிருந்து ஏராளமான தேயிலை இறக் குமதி செய்யவேண்டி யிருக்கிறது. ஆனுலும் இதிலிருந்து என்னவிசேஷ மனத் தேறுதல் நமக்குக்கிடைக்கிறது. தேயிலைத்தோட்டங்கள் ஆஸாம் முதலிய மாகாணங்களில் ஏராளமாக விருக்கின்றன. அவைகளின் சொந் தக்காரர் இந்தியர்களல்லவே. அவர் விதேசியர்களே. இந்தியர்களைப் போல் இருக்கவேண்டுமென்று அவர் எண்ணுகிருருமில்லை. பாரத மக் கட்கு இந்த தேயிலை தோட்டங்களில் அடிமைத் தொழிலுக்கு சமான மானகூலிவேலை மாத்திரம்தான் செய்யவேண்டி யிருக்கிறது. இந்தியா சுதந்திரம் பெறுமாகில் இந்த விஷயத்தில் நல்ல மாறுதல் வரலாமென்று நம்பலாம். அக்காலத்தில் தேயிலை தோட்டங்களின் சொந்தக்காரர் இந்

தியர்களைப் போலவே எண்ணவேண்டி யிருக்கும். நமது இராஜ்யத்தின் நலத்திற்காகவே பாடுபடவேண்டி யிருக்கும். ரப்பரின் ஸ்திதியும் தேயிலையின் ஸ்திதியைப் போலவேதான். அதன் விவசாயத்தில் நாம் ஐந்தாவது பதவியிலிருக்கிறோம்.

ஒரு விவசாய நாட்டிற்கு அதன் பயிர்களே பிரதானமான ஆஸ்திகள் ஆகும். அடுத்த படியில் கருதக்கூடியவை ஆடுமாடுகளாகும். நம்மிடமிருக்கும் மாடுகளை கணக்குப் பார்ப்போமானால் நமக்கு நிகராக வேறெந்த இராஜ்யமும் இல்லை. அவைகளின் எண்ணம் 185,832,000. ருஷியா இரண்டாவதாகும்; ஐக்கிய நாடுகள் மூன்றாவதாக இருக்கின்றன அந்த இராஜ்யத்தில் மொத்தம் 55,676,000 மாடுகளிருக்கின்றன. ஆடுகளின் விஷயத்தில் நாம் மிகவும் பின்னேக்கிவிட்டோம். இதற்கு நமது காட்டுச் சட்டங்கள் ஒருகால் காரணங்களாக விருக்கலாம். ருஷியாவே முதல் பதவியை அனுபவிக்கின்றது. அத்தேசத்தில் 123,810,000 ஆடுகளும் அடுத்தபடியாக ஐக்கிய நாடுகளில் 44,795,100ம், தென்னாப்பிரிக்காவில் 42,662,000ம் இருக்கின்றன. நாம் நாலாவது மாத்திரம்தான். நமது இராஜ்யத்தில் 23,350,000 ஆடுகள் தான் இருக்கின்றன. இதைத்தவிர, ஐக்கிய நாடுகளிலும், ருஷியாவிலும், ஜெர்மனியிலும் ஏராளமான பன்றிகளும் இருக்கின்றன.

இந்த புள்ளி விவரங்களிலிருந்து இந்தியாவினுடையதும் இதர தேசங்களுடையதும் விவசாய நிலைமை நன்கு புலப்படும். பண்டைக் காலத்தில் நமது ராஜ்யம் வெகு முன்னேற்றம் அடைந்திருந்ததைப்பற்றி நாம் வெகு சந்தோஷப்படுகிறோம். தற்காலத்தில் கூடவும் சில பொருள்களை உற்பத்தி செய்வதில் நாம் சக்தி வாய்ந்தவராகத்தானிருக்கிறோம். ஐக்கிய நாடோடு ஒப்பிடுவோமானாலும் நமது சக்தி கொஞ்சமும் குறைந்ததல்ல. இவ்விதமாயினும் ஐக்கிய நாடுகள் நம்மைவிட அதிகம் முன் சென்றுவிட்டனவென்று சம்மதிக்க வேண்டியதுதான். விவசாயத்தில் மாத்திரம்தான் இந்தியாவை ஐக்கிய நாடோடு ஒப்பிடலாம். அதிலும்கூட அவர்களின் நூதன வழிகளாலும் ஒத்துழைப்பாலும் நம்மை விட அவர் அதிகம் முன்னேறிவிட்டார்கள். அந்த இராஜ்யத்தில் பிரசுரிக்கப்படும் ஒரு வருஷ புஸ்தகத்தை வாசித்தால் இது புலப்படும். அதில் கூறியிருப்பதாவது:—“ஐக்கிய நாட்டு விவசாயிக்கு கிருஷியைக் குறித்த சமாசாரங்கள் ஒன்றும் தேவையில்லை. மிகவும் நூதன ஆராய்ச்சிகளையே அவன் நாடுகிறான். அவைகளை அவனுக்கு தருவித்துக் கொடுக்கவேண்டும்”. அவனுடைய கணக்குகளும், விற்பனை வழிகளும், பண முறைகளும் மிகவும் உத்தமமானவை. உண்மையில் உலக விவசாயிகளில் வைத்து அவனே அதிக புத்திசாலியும், அறிவு பெற்றவனுமாவன். இந்திய விவசாயியின் நிலைமையை கவனியுங்கள். அவன் எவ்விதம் அபிவிருத்தியடைவான்? அதற்குக்கூடிய சீக்கிரத்தில்

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்கவேண்டும். இந்திய விவசாயியை அவன் கிடக்கும் பாழ் கிடங்கிலிருந்து கரையேற்ற அரசாங்கத்தார் முன் வரவேண்டும். இவ்விதம் சம்பவிக்காவிட்டால், விவசாய உற்பத்தியில்கூட இந்தியா அபிவிருத்தியடையுமோ என்று நாம் சந்தேகிக்க வேண்டியதுதான்.

விவசாயத்தை நாம் இதுகால் கவனித்தோம். இனிமேல் அதற்கு நெருங்கின சம்பந்தமுள்ள விவசாய பொருள் கைத்தொழிலை நாம் கவனிக்கவேண்டும். இந்த கைத்தொழில்கள் தனி வகுப்பொன்றைச் சார்ந்தவைகளென்று எல்லோருக்கும் தெரிந்த விஷயமே இதர கைத்தொழில் பொருள்களிலிருந்து இவை மாறுபட்டவை. அவைபாவன :—பால், வெண்ணெ, பால்கட்டி, நெய், சாப்பிடக்கூடும் தாவர எண்ணெகள், முட்டைகள், மாம்சம், கோழி, முதலியவை. இவைவளே உற்பத்தி செய்வதில் புகிதாக ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்பங்களிலிருந்தும் நாம் பின்னேக்கி இருக்கிறோம். ஐபர்லாண்டு, டென்மார்க்கு, கானடா, ஆஸ்திரேலியா, ஐக்கிய நாடுகள், ருஷியா, ஜெர்மனி, இந்த தேசங்களிலெல்லாம் கிருஷியோடு சம்பந்தப்பட்ட அநேகம் தொழில்கள் ஸ்தாபிப்பதே கூட்டுறவு இயக்கத்தின் பிரதான உத்தேசமாகக் கருதப்படுகின்றன. இங்கிலாந்திலும் பால் சங்கங்கள், பாலாடைச் சங்கங்கள், வெண்ணெ தொழிற்சாலைகள், பாற்சாலைகள், முதலியவைகளை ஸ்தாபிப்பதில் கூட்டுறவு இயக்கம் அதிக கவனம் செலுத்துகின்றது.

ஐக்கிய நாடுகளின் நிலைமையை அறிவதற்காக 1930-ம் வருடத்திய அமெரிக்க விவசாய வருஷ புஸ்தகத்திலிருந்து சில பாகத்தை இவ்விடம் நாம் வரைந்துள்ளோம்.

> "கூட்டுறவு சங்கங்கள் தன சகாயம் மாத்திரம் செய்வது போதாது. இந்த வருஷத்தில் கூட்டுறவு விற்பனை, பொதுத் திறமை, மெம்பர்களின் எண், செய்த வேலையின் அளவு இவைகளெல்லாம் அதிகமாயிருப்பது சந்தோஷிக்கவேண்டிய விஷயமாகும். கூட்டுறவு ஆடு மாடு சங்கங்கள் இப்பொழுது பிரதான 26 மார்க்கட்டுகளில் வேலை செய்கின்றன. அவைகளில் 12 எண்ணம் தேசிய விவசாயிகளின் ஆடு மாடு மார்க்கட்டிங் சங்கத்தோடு சேர்ந்திருக்கின்றன. 9 எண்ணம் விவசாயி யூனியன் சங்கங்களுடன் சேர்ந்திருக்கின்றன. இதர சங்கங்கள் தனிமையாக வேலை செய்கின்றன. தானியங்களை விற்பனை செய்வதற்கு மத்திய சங்கம் ஏற்படுத்த சிரமப்படுகிறார்கள். அதில் கொஞ்சம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால் சங்கத்தை ஏற்படுத்தும் விஷயத்திலுள்ள பின்னபிப்பிராயங்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஆதலால் மத்திய தானிய விற்பனைச் சங்கம் பால்ய ஸ்திதியில் தான் இருக்கின்றது. தனித்தனியாகவிருந்த கூட்டுறவு பால்கட்டிச் சாலைகளும், வெண்ணெச் சாலைகளும் ஒன்று சேர்ந்து

பெரிதான பெடரேஷன்களாகி யிருக்கின்றன. அநேகம் கூட்டுறவு பால் சாலைகளும் தேசீய சங்கமொன்றில் மெம்பராகச் சேர்ந்திருக்கின்றன. சென்ற 4, 5-வருஷங்களில் பெரிதான கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. மேலும், அவைகள் ஐக்கிய விற்பனைக்காக ஒன்று சேர்ந்து பெடரேஷன்கள் ஸ்தாபிப்பதிலும் சிரத்தை செலுத்துகின்றன. அமெரிக்காவிலுள்ள கூட்டுறவு இயக்கத்தின் தற்பொழுதுள்ள நிலைமை யென்னவென்று அறிவதற்கு ஒரு சுலப வழி யிருக்கின்றது. அவ்விடத்தில் 200-க்கு அதிகப்பட்ட விவசாயிகளின் சங்கங்களிருக்கின்றன. ஒவ்வொன்றும் வருஷந்தோறும் 10,00,000 லட்சம் டாலருக்கு அதிகமாக வியாபாரம் செய்கின்றது."

இவ்விஷயங்களில் நமது தேசத்தின் நிலைமை மிகவும் பரிதாபகரமாகவிருக்கின்றது. உதாரணமாக கூட்டுறவு பால் வியாபாரத்தை எடுத்துக்கொள்வோம். பம்பாயில் இச்சங்கங்களை ஸ்தாபிக்க சொல்ப சிரமம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஐக்கிய மாகாணத்திலோ அதிலும் குறைந்த சிரமம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். சென்னையிலேயோ மிகவும் குறைந்த சிரமத்தை நாம் காண்கிறோம். அரசாங்கத்தாரும் ஜனங்களும் இதைக் காட்டிலும் கூடுதல் பிரயத்தினம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பிரயோசனமற்ற ஒரு பயிர் கிருஷியை நாம் செய்கிறோம். பழச் செடிகளை நாம் வளர்ப்பதே யில்லை நமது ஸ்திதி இவ்விதமிருக்க உலகத்திலுள்ள இதர தேசங்களிலிருந்து (ஐக்கியநாட்டிலிருந்தும் கூட) பழங்கள் பத்திரமாக காப்பாற்றப்பட்டு நம்முடைய தேசத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. அநேக பயிர் செய்வதாலுள்ள குணங்களை ஐக்கிய நாட்டார் தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஐக்கிய நாட்டு விவசாயியும் எவ்விதம் கிருஷி செய்வதால் அதிகம் லாபம் கிடைக்குமென்பதையும் அறிந்துகொண்டிருக்கிறான். அந்த தேசத்திலுள்ள ஜன நாயக ஆட்சி விவசாயிகளுக்கேற்ற கல்வியை நன்றாக கற்பித்திருப்பதால் அமெரிக்க விவசாயியே உலக விவசாயிகளுக்கு சான்றாகவிருக்கிறான். அவனையே எல்லாப் புது இராஜ்யங்களும் போற்றுகின்றன. அவ்விடத்து ஜன நாயக ஆட்சியை நவீன மூட வேதாந்திகள் பணப்பேய்ப் பிடித்ததென்று பரிகாசம் பண்ணுகிறார்கள். இது வெறும் தப்பிதம். நமது தேசத்தின் நிலைமை யென்ன? ஐக்கிய நாட்டைப்போல் அது எப்பொழுது உலகத்திற்கு எடுத்துக் காட்டாகும்? ஐக்கிய நாட்டிற்கு சம நிலைமையை நாம் அடையவேண்டுமானால் எவ்வளவு சுறுசுறுப்பாகவிருக்கவேண்டும். இந்தியா அந்த நிலைமையை அடைவதால் இங்கிலாந்திற்குக் கூட பெருத்த சகாயம் ஏற்படக்கூடுமன்றோ. இதை நமது அரசாங்கத்தார் எப்பொழுது அறிந்துகொள்வார்கள்?

உலக வாழ்வு—பாரத தேசத்தின் ஸ்தானம்

பிரசிடேன்டு ஹூவரின் திட்டம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரசிடெண்டான மிஸ்டர் ஹூவர் இப்பொழுது ஒரு மகத்தான திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். அதினால் சாஸ்வதமான புகழை அவர் பெற்றிருப்பதுமன்றி, உலகத்தில் ஐக்கிய நாடுகளுக்குள்ள கீர்த்தியையும் ஆயிரம் சடவை அதிகப்படுத்தி இருக்கிறார். பொருளாதார நெருக்கடியால் உலகம் முழுதும் என்ன செய்வதென்று தெரியாமல் மனம் கலங்கி இருக்கும் தருணத்தில் அப் பெரியார் ஜனங்களை நுட்பமான தமது ஆலோசனையில் சேர்த்துக்கொண்டு, ஐக்கியநாட்டு கவர்ன்மெண்டார் ஒரு வருஷகாலம் யுத்தக்கடன் வாங்குவதை நிறுத்திவிட நிச்சயித்திருப்பதாக அறியிக்கை செய்தார். அதன் பொருள் என்னவென்பதை நாம் கவனிக்கவேண்டும். ஐக்கிய நாட்டு கவர்ன்மெண்டாருக்கு இதர இராஜ்யங்கள் ஒரு வருஷகாலம் கடன்கொடுக்க வேண்டியதில்லை. மேலும் அந்த வருஷத்தில் கொடுக்கவேண்டிய வட்டிகூட அவர்கள் கொடுக்க வேண்டாம். ஜர்மனிதேசத்திற்கு இது பெரிதான உபகாரமாகும். பணச்சிக்கனத்தால் வருந்துகின்ற அத்தேசத்தார் வெகு ஆவலோடு ஹூவரின் திட்டத்தை வரவேற்றார். யுத்தத்தால் பாழாக்கப்பட்ட தேசங்களிடம் ஜனங்களுக்கு அளவிடக்கூடாத இரக்கமிருப்பதால், எல்லோரும் இத்திட்டத்திற்கு மனப்பூர்வமான ஆசி கூறினார்கள். இத்திட்டத்தைக் கையாளுவதால் கடன் கொடுத்திருக்கும் தேசங்களின் வருமானத்தில் அநேகலக்ஷம் பவுன்கள் குறைந்துவிடும். ஆனால் கடன்காரன் அபரிமிதமான கஷ்டங்களை அனுபவிக்கும் பொழுது எந்த லேவாதேவிக்காரனுக்கும் தனக்குக் கிடைக்கவேண்டிய பணம் முழுதையும் பெற்றுக்கொள்ள சற்றும் உரிமை கிடையாது. பணப்பேயோடு பொருதுகில் ஜீவகாருண்யம் வெற்றிபெறுமென்பதில் என்ன சந்தேகமிருக்கிறது ? பிரசிடெண்டு ஹூவரிட்டிருக்கும் திட்டமானது தேசங்களுக் கிடையில் மட்டுமே அனுசரிக்கக் கூடும் என்று நாம் எண்ணவில்லை. ஆராயுமிடத்து, கிரேட்பிரிட்டன் அத்திட்டத்தை அதன் ஏகாதிபத்தியத்திலடங்கிய இராஜ்யங்களில் கையாளுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றது. இந்தியாவிற்கும் இதுபோலவே செய்யத் தயாராக விருப்பதாக மிஸ்டர் ராம்சே மாக்டனால்டு கூறியிருக்கிறார். ஆனால், இந்தியாவிற்கு அது அவசியமில்லை என்றும் அவர் நம்புகிறார். நமது கடமை என்னவென்றால் நாம் இதோடு நின்று விடக்கூடாது. இந்திய விவசாயி படும் துயரத்திற்கு அளவே இல்லை. அவனது நலத்தைக் கருதியும், இந்தியா தேசத்தின் நலத்தைக் கருதியும் இந்திய அரசாங்கத்தார் ஓர் காரியம் செய்யவேண்டியது அவசியமாகும். இத்தேசத்திலுள்ள கடன்களை எல்லாம் கொஞ்சக்காலத்திற்கு நிறுத்திவிட்டு, சமயத்தில் இந்திய விவசாயியின் கடன்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய முறைகளையும் ஏற்படுத்தி, அவனை நல்ல ஸ்திதியில் கொண்டுவர அரசாங்கத்தார் முயர்ச்சித்துக் கொள்ள வேண்டும். அவர் அவ்விதம் செய்வார்களா ?

புத்தூர் தாலூகா பஞ்சாயத்து மகாநாடு.

தெற்கு கன்னட ஜில்லாவைச் சார்ந்த புத்தூர் தாலூகாவிலுள்ள பஞ்சாயத்துக்கள் அவைகளுடைய வருமானத்தை நோக்குமிடத்து மெச்சத்தக்கவிதம் வேலை செய்திருப்பதாக தெரியவருகிறது. அவைகளின் ஆட்சி ரிப்போர்ட்டை நமது பத்திரிகையில் வேறோரிடத்து பிரசுரித்திருக்கிறோம். ம-ள-ள-ஸ்ரீ M. சிவராவுவின் தலைமையில் 1931-ம்௵ எப்பிரல்௴ 20-ம்௳ நடந்த அந்த மகாநாட்டில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளை நாம் கவனிக்கவேண்டும். சென்னை லோகல் போர்ட்ஸ் சட்டத்தையும், அதன்கீழ் கொண்டுவரப்பட்ட ரூல்களையும், கவர்ன்மெண்டு ஆர்டர்களின் சாராம்சத்தையும் கன்னட பாஷையில் மொழிபெயர்க்கவேண்டுமென்று அவைகளில் காணப்படுகின்றன. இச்சட்டம் அமுலுக்கு வந்த சமயம் சென்ற ஆகஸ்ட்மாதமாகும். எப்பிரல்மாதக் கடைசியில் இவ்வித ஒரு வேண்டுகோளை கன்னடதேசம் கேட்கிறது மிகவும் விசனிக்கத் தக்கதாகும். அநேக பாஷைகளுள்ள ஒரு மாகாணத்தின் அவஸ்தை என்னவென்பதை இது வெகு தெளிவாகக் காண்பிக்கிறது. அவ்விடத்து ஜில்லா போர்டார் கிராம புனருத்தாரண ஏற்பாட்டை நிறுத்துவதற்கு ஆலோசிப்பதாகவும் அப் பணத்தைக் கொண்டு வேறோரிடத்து ஒரு ஹைஸ்கூலைக் கட்ட நிச்சயித்திருப்பதாகவும் அறிகிறோம். மகாநாட்டில் கூடியவர்கள் இதைக் கண்டித்துப்பேசினார்கள். அவர்கள் செய்தது சரியே. கிராம புனருத்தாரணம் விளையாட்டுப் பொம்மையன்று. மனம் வந்தபோது ஆரம்பித்துவிட்டு பின்பு எப்பொழுதுவேணுமோ அப்பொழுது விட்டுவிடக்கூடியதல்ல அது. கிராம புனருத்தாரணத்தைத் தொடங்கிவிட்டால் அதை எப்பொழுதும் நடத்தவேண்டும். புதிதாக ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைக்காட்டிலும் அதைக் கட்டாயமாகக் காப்பாற்றவேண்டும். கிராம புனருத்தாரணத்திற்கே கூடுதல் உரிமையுண்டு. கிணறு குழிப்பதற்கும், ரஸ்தா அமைப்பதற்கும் கிராம அபிவிருத்தி நிதியிலிருந்து பஞ்சாயத்துக்களுக்குக் $\frac{1}{4}$ பொருளுதவி கொடுக்கவேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நாம் பார்க்கலாம். இது சற்றும் மிகையாகாது. கவர்ன்மெண்டாரின் உதவியால் எல்லாவிடத்திலும் கிராம அபிவிருத்தி பண்டு அதிகப்படுவது நிச்சயமாதலால் இந்த உதவியாவது பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கலாம். வேறு இரண்டு தீர்மானங்களால் பள்ளிக்கூடங்கள் அமைப்பதற்கு பாதி கிராண்டும், பயிர்ச்சிபெற்ற உபாத்தியாயர்களை நியமிக்கும்பொழுது அந்த பள்ளிக்கூடங்களுக்கு கூடுதல் விகிதம் கிராண்டும் கொடுக்கவேண்டுமென்று பஞ்சாயத்துக்கள் வேண்டிக்கொண்டிருக்கின்றன. பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவதை சுருக்கமாகச் செய்யவேண்டும். ஏனென்றால் பள்ளிக்கூட கட்டிடங்களிலேயே பொதுப் பணத்தின் அதிக பாகத்தையும் செலவிட வேண்டி இருக்கிறது. அரசாங்கத்தார் இனிமேல் ஆரம்ப கல்வி பில்லை திருத்தம் செய்யும்போது, கிராமங்களில் தெய்வத்திற்கு என்று பிரத்தியேகம் வைத்திருக்கும கட்டிடங்களை பள்ளிக்கூடங்களுக்காக எடுத்துக்கொள்ள அதிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் இவ்விதம் கட்டிடங்களை எடுத்துக் கொள்ளும்போது பஞ்சாயத்துக்களை கேட்டுக் கொள்வது உசிதமாகும். இவ்விதம் செய்வதால் பள்ளிக்கூடக் கட்டிட பிரச்னையை ஒருவிதம் சரிப்படுத்தலாம். தனி வகுப்புகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களை அடைத்துவிடவேண்டும்; ஆண்பிள்ளைகட்கும் பெண்பிள்ளை

கட்கும் இருக்கின்ற தனிப் பள்ளிக்கூடங்களை கட்டாயமாக ஒன்று சேர்க்கவேண்டும். இவ்விதம் பற்பல பள்ளிக்கூடங்களை நடத்துவது வீண் செலவென்று பஞ்சாயத்துக்கள் உணரவேண்டும். இதற்கு தாலுகா போர்டாரே முன்வந்து வேலை செய்யவும், தாமே பஞ்சாயத்துக்களுக்கு ஒரு சான்ருக விருக்கவும் பிரயத்தனிக்கவேண்டும். மேலும் கல்வி இலாகா அதிகாரிகள் பள்ளிக்கூடங்களுக்குப் பெரிய கட்டிடங்களின் அவசியத்தைப்பற்றி அதிகம் வற்புறுத்தக் கூடாது. இந்தியா இராஜ்யத்தில் கற்களால் கட்டப்பட்ட பெரிய கட்டிடங்கள் அவசியமில்லை. பல சமயங்களிலும் அநேக ஸ்தலங்களிலும் அரசமரம் முதலிய மரங்களின் நிழலிலேயே பள்ளிக்கூடங்களை வைத்துக்கொள்ளலாம். கிராமாந்தர ஆண் பிள்ளைகளையும் பெண்களையும் கால நிலைமையைப்பற்றி அதிகமாக நாம் எச்சரிக்கை செய்யக்கூடாது. காற்று, மழை, வெய்யில் இவைகளை அவர்கள் கூட்டாக்காமல் வெட்ட வெளியில் வசிக்க சீலித்துக்கொள்ளவேண்டும். நமது பள்ளிக்கூட கட்டிடங்களுக்கு நாற்புறமும் பெரிய சுவர்கள் அடைத்திருக்கவேண்டியதில்லை. நியாயமான தேவை யென்னவெனின், நல்ல தளமிட்ட தரையோடு கூடிய ஒரு பந்தல் போதும். எல்லா கால நிலைமைகளிலும் இதை உபயோகித்துக்கொள்வதில் கொஞ்சமேனும் கஷ்டம் நேரிடாது. புத்தூர் பஞ்சாயத்தில் நிறைவேறிய இன்னும் இரண்டு தீர்மானங்களை நாம் கவனிக்கவேண்டும். சர்க்கார் தரிசு நிலங்களை ரஸ்தாக்கள் அமைப்பதற்காக பஞ்சாயத்துக்களுக்கு நீக்கிக் கொடுக்கும்போது அவர் சாதாரணமாக சில நிபந்தனைகளை ஏற்படுத்துவதும் கொஞ்சம் பணம் பெறுவதும் வழக்கம். இந்த நிபந்தனைகளை சில பொழுது பஞ்சாயத்துக்களால் நிறைவேற்ற முடியவில்லை. அப்பொழுது அந்த தரிசுகள் சர்க்காரைச் சேர்ந்து விடுகின்றன. மீண்டும் பஞ்சாயத்துக்கள் சர்க்காரை மனு செய்து கொண்டு அவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுது கவர்ன்மெண்டாருக்கு பஞ்சாயத்துக்கள் மீண்டும் பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அந்த மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தில் இவ்விதம் இரண்டாவது தடவை சர்க்கார் பணம் கேட்கக்கூடாதென்று கூறியிருக்கிறது. ஒரு நபரிடமிருந்து இவ்விதம் பணம் வசூல் செய்தால் அவன் அதிகம் கஷ்டப்படுவான். பஞ்சாயத்திடமிருந்து வசூலிப்பது இதிலும் கூடுதல் கஷ்டத்தைக் கொடுக்கும். ரவினியூ இலாகா அதிகாரிகள் இதைச் சற்று சாதகமாக கவனிப்பாரென்று நாம் நம்புகிறோம். ரஸ்தாக்கள் அமைப்பதற்கு ரவினியூ அதிகாரிகளின் பூர்வ சம்மதத்தை எதற்காகப் பெறவேண்டுமென்பது நமக்குப் புலப்படவில்லை. மற்றொரு தீர்மானத்தில் இம்முறையை நிறுத்தவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ரவினியூ அதிகாரிகளின் பூர்வ சம்மதமின்றியே வழிப் பாதைகளிலுள்ள மரம், செடி இவைகளை வெட்டுவதற்கு பஞ்சாயத்துக்கள் சுதந்திரம் பெறவேண்டும். இதையும் அரசாங்கத்தார் கவனிப்பாராக. பஞ்சாயத்துக்களுக்கு தேவையுள்ள பொழுது கிராம ஆரம்ப பள்ளிக்கூடத்தில் பஞ்சாயத்து ஆபீசை வைத்துக்கொள்ள தாலூகா போர்டார் அனுமதி கொடுக்கவேண்டுமென்று அந்த மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை தாலூகா போர்டார் சிரத்திக்கவேண்டும். ரவினியூ அதிகாரிகளும், ஸ்தல சுய ஆட்சி அதிகாரிகளும் கலந்து பேசிக்கொண்டு ஒரு முடிவுக்கு வருவார்களானல், அநேக ஸ்தலங்களிலுள்ள கிராமச் சாவடியை கிராமப பஞ்சாயத்தும், கிராமத் தலைவனும் ஒன்று சேர்ந்தனுபவிக்கக் கூடும்.

விவசாயியை ரக்ஷித்தல்.

சமீபத்தில், குண்டூரில் நடந்த ஆந்திரதேச விவசாயிகளின் காஃபிரன்ஸில் நிறைவேறிய தீர்மானத்தைக் கவர்ன்மெண்டார் கவனிப்பாரென்று நம்புகிறோம். அந்தத் தீர்மானம் ஸ்ரீ பிரகாசம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீ ராமதாஸ் பந்துலு அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. அதைப்பற்றி விசேஷமாக நாம் அபிப்பிராயம் சொல்லவேண்டியதில்லை. தீர்மானம் பின்வருமாறு:—

(1) தானிய விலைக்குறைவால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 150 கோடி என்று பாங்கிங் என்க்வெயரி கம்மிட்டியார் மதிப்பிடுகிறார்கள்—விவசாயிகளுக்கு ஏற்பட்ட கடன் தொல்லைகளை நிவர்த்திக்கத் தகுந்த வழிகள் உடனே செய்யவேண்டுமென்று இந்தக் கான்பிரன்ஸ் கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொள்கின்றது. அதோடுகூடி லேவாதேவிக்காரர்கள் விவசாயிகளின் நிலத்தைக் கைக்கொள்வதினின்றும் அவர்களைக் காக்கத் தகுந்த முறைகள் செய்து, அப்படிச் செய்வதால் நிலமிருக்கும் இடங்களில் வசிக்காமல் வேறு இடங்களில் வசிக்கும் நிலச்சுவான்கள் ஏற்படுவதைத் தடுக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

இந்த நெருக்கடியான நிலைமையினின்றும் விவசாயிகளைக் காப்பாற்றத் தகுதியான வழி கவர்ன்மெண்டாரே நேரில் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன்கொடுத்து, அக்கடனை சுமார் 20 வருடகாலத்தில் பல வாயிதாக்களாகத் திரும்பப் பெற்றுக்கொள்வதுதான் சரியான முறையென்று இந்தக் கான்பிரன்ஸ் எண்ணுகிறது.

மேலும், இவ்விதம் உதவிசெய்வதற்காக, ஸ்தல கவர்ன்மெண்டுகள், தாற்காலிகமாக நாணயச் செலாவணிக்காக கரன்ஸி நோட்டுக்கள் வெளியிட்டு, அவைகளை ஸ்தல கவர்ன்மெண்டாருக்குக் கடனாகத் தரவேண்டுமென்றும், ஷை ஸ்தல கவர்ன்மெண்டார் அந்தப்பணத்தை விவசாயிகளுக்கு நிலங்களைக் கொதுவையாக வைத்துக்கொண்டு குறைந்த வட்டியில் கடன்தரவேண்டுமென்றும் அவ்விதம் செய்வதால் விவசாயிகள் தாங்கள் ஏற்கனவே வாங்கியிருக்கும் கடன்களைத் திருப்பிக்கொடுக்க முடியுமென்றும், அவ்விதம் திரும்பப்பெற்ற முதலை லேவாதேவிக் காரர்கள் கவர்ன்மெண்டாருக்குக் குறைந்த வட்டியில் கடன்கொடுப்பதால் தாற்காலிகமாக வெளியிட்ட கரன்ஸி நோட்டுக்களைத் திருப்பிக்கொள்ளலாமென்றும் இந்தக் கான்பிரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

விவசாயிகளின் கஷ்டங்களை நிவர்த்திக்கவேண்டிக் கையாளும் முறைகளில் கீழ்க்கண்டவைகள் இப்பொழுதே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தக் கான்பிரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது. அவையாவன :—

(1) நில அடமான பாங்கியின் செலவாணிக்கு வேண்டிய பணம் கொடுத்து அதனால், முன்கூட்டியே கடன்வேண்டி மனு செய்துகொண்டிருக்கிற விவசாயிகளின் வேண்டுகோள்களைப் பூர்த்திசெய்யவேண்டும்,

(2) கூட்டுறவு பாங்குகள் தங்களிடம் கடன் பெற்றிருப்பவர்களின் கால வரையறையை நீடிக்கவேண்டி அவைகளுக்கு மொத்தத்தில் ஒரு கோடி ரூபாய் கவர்ன்மெண்டார் கடன்கொடுக்கவேண்டும்.

(3) விவசாயக் கடன் ஆக்டின் கீழும், நில அபிவிருத்திக்கடன் ஆக்டின் கீழும், விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் கொடுக்கவேண்டும்.

(4) அநியாயவட்டிக் கடன் ஆக்டின் கீழும், ஸிவில் புரோஸீஜர் கோடின் கீழும், வரும் கேஸ்களில், கோர்ட்கள் தங்கள் யதேச்சாதிகாரத்தைத் தாராளமாக உபயோகித்து அதனால் ஷை கோர்ட்கள் கடன் வாங்கியிருக்கும் விவசாயிகளுக்கு வேண்டிய அநுகூலங்களை செய்ய வேண்டியதற்கான வழிகளைத் தேடவேண்டும்.

(5) ஒரு கிராம இன்ஸால்வென்ஸி ஆக்ட் பாஸ் செய்து, கடன் வாங்குபவர்களுக்கு, ஷை ஆக்டின்கீழ், கிராம அதிகாரிகளால், அந்தந்த இடங்களிலேயே (கிராமங்களிலேயே) நிவர்த்தி முறைகளைக்கையாளுதல்.

(6) விவசாயிகளுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கும் இடையில் ஏற்படும் தாவாக்களையும், கடன்களையும் தீர்ப்பதற்கு சமாதான வழிகளிலும் தவறினால் கட்டாயத்தின் மூலமாகவும் தீர்த்து வைப்பதற்காக கடன் தீர்ப்பவர்களை நியமிக்கச் சட்டம் செய்யவேண்டும்.

தீர்க்கப்பட்ட கடன் தொகைகளை கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் நில அடமான பாங்கியிலிருந்தும் தீர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(ஜீ. ஓ. நெம்பர் 2080, L. & M.)

நெம்பர் 1078.—சென்னைக் கவர்ன்மெண்டார் தொழிற்சாலை, வேலைக்கூடம், வேலை ஸ்தலம், வேலைக் கட்டிடம் இவைகளின் பிளான்களைக் குறித்தநகல் ரூல்களை போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரித்திருக்கின்றனர். பிரசுரித் திருக்கும் தேதியிலிருந்து 6-வாரங்களுக்குப் பிறகு இந்த நகல் மேல் ஆலோசனைக்கு வரும். இதைப்பற்றிய அபிப்பிராயங்கள் மேல் குறிப்பிட்ட நாட்களுக்குள் சர்க்காருக்கு கிடைக்குமாகில் அவர் அவைகளைக் கவனிப்பார்கள்.

நகல் ரூல்கள்.

1. 1920-ம் வருஷத்திய சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தின் 191-வது செக்ஷன்படி அனுப்பப்படும் வேண்டுகோளின் ப்லான்கள் இரட்டிப்பாக வே அனுப்பவேண்டும். அவைகளில் அடங்கி யிருக்கவேண்டியவை :—

(i) ஸ்தலத்தின் ப்லானும்,

(ii) கட்ட உத்தேசித்திருக்கும் தொழிற்சாலை, வேலைக்கூடம், வேலைக் கட்டிடம், வேலை ஸ்தலம், இதர ஸ்தலங்கள் எதுவானாலும் சரி, அவைகளின் ப்லான்களில் அதன் உயரமும், பாகங்களும் காணப் படவேண்டும். ஒரு அடிக்கு $\frac{1}{8}$ அங்குலத்திற்குக் குறையாத அளவில் அந்த ப்லான்கள் வரைந்திருக்கப்படவேண்டும்.

2. ஒவ்வொரு ஸ்தல ப்லான்களும் குறிப்பிடவேண்டியவை :—

(a) அந்த ஸ்தலத்தின் எல்லைகளும், மனுதாருக்கு ஏதாவது ஸ்தலம் சமீபத்தில் இருக்குமாகில், அதன் எல்லைகளும்.

(b) பக்கத்து தெருக்களைப் பார்க்குமிடத்து இந்த ஸ்தலத்தின் ஸ்திதி.

(c) கட்டிடம் அமைக்க உத்தேசித்திருக்கும் தெருவின் பெயர்

(d) 1. கிளாஸ் ஏ-ல் குறிப்பிட்ட பக்கத்து ஸ்தலத்தில் மனுதார் கட்ட உத்தேசித்திருக்கும் கட்டிடத்திற்கும் அல்லது கட்டிடங்களுக்கும் தொழிற்சாலை முதலிய ஸ்தலத்தின் எல்லைக்குமுள்ள சம்பந்தம்.

2. 250 அடி தூரத்திலுள்ள எல்லா பக்கத் தெருக்களும், கட்டிடங் களும், ஸ்தலங்களும், கிளாஸ் ஏ-ல் குறிப்பிட்ட பக்கத்து ஸ்தலமும், தொழிற்சாலை முதலியவைக்குள்ள ஸ்தலமும் எவ் விதம் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

(e) கிளாஸ் ஏ-ல் குறிப்பிட்ட ஸ்தலத்தில் மனுதார் அமைக்க உத்தேசித் திருக்கும் கட்டிடம் அல்லது வேறு கட்டிடங்கள் இவைகளுக்கு தெருவிலிருந்து போவதற்குள்ள வழி.

(f) அந்த ஸ்தலத்திலிருந்து 250 அடி தூரத்திலுள்ள எல்லா கட்டிடங் களின் அமைப்பும். அவைகளின் உத்தேச உயரமும்.

(g) கட்ட உத்தேசித்திருக்கும் கக்கூசு, சாக்கடை, யூரினல், செஸ்பூல், கிணறு முதலியவைகளின் இடமும் அளவுகளும்.

(*h*) கட்டிடத்துக்கு முன்னுள்ள வழி.

(*i*) காற்றும் வெளிச்சமும் வருவதற்கும், கக்கூசை சுத்தி செய்ய தோட்டிகள் வருவதற்கும் கட்டிடத்தைச் சுற்றி விடப் போகின்ற ஸ்தலம்.

(*j*) கட்டிடத்திற்கு முன்பாவது, பின்னவது தெருவிருந்தால் அத்தெருவின் அகலம்.

3. உத்தேசித்திருக்கும் தொழிற்சாலை, வேலைக்கூடம், வேலை ஸ்தலம், வேலை கட்டிடம் இவைகளின் ப்லான்கள் குறிப்பிடவேண்டியவை :—

(*a*) அவைகளின் கீழ்த் தரையின் மட்டம்.

(*b*) அவைகளைச் சுற்றி வரும் திறந்த வெளிகளின் மட்டம்.

(*c*) அவைகளின் ஆழமும், அகலமும்.

(*d*) எல்லா வெளிச் சுவர்களுடையவும், உட் சுவர்களுடையவும் கனம்.

(*e*) சாளரம், கதவு, காற்றுத் துவாரம் இவைகளின் ஸ்தலமும் அளவும்.

(*f*) பாய்லர், நீராவி, காஸ் அல்லது எண்ணை இயந்திரம், மின்சார இயந்திரம், டர்பயின், ஜலத்தால் ஓடும் சக்கரம் அல்லது இதர இயந்திரம், அல்லது மின்சார சக்தி, ஒவ்வொரு இயந்திர லயின், ஷாப்டு பர்னஸ், புகைப்போக்கி, உலை, தண்ணீர்த் தொட்டி, காய்ந்த வெள்ளம் போய்ச் சேரும் குழி, எக்ஸாஸ்ட் அல்லது மற்ற விதமான பைப்பிங் இவைகளின் ஸ்தலமும் எரியாவும்.

குறிப்பு.—கிளாஸ் (*a*) முதல் (*f*) வரையுள்ளவைகளில் கூறியிருக்கும் எல்லா விவரங்களும் ப்லானில் அடையாளப்படுத்தி யிருப்பதாக ஒரு சர்டிபிகேட்டும் ப்லானோடு அனுப்பவேண்டும்.

4. கக்கூசுகளை சரியான விதம் அமைக்கப் போதுமான ஸ்தலம் 1920-ம் வருஷத்திய சென்னை லோக்கல் போர்டு சட்டத்தின் 194-வது செக்ஷனில் குறிப்பிட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும், வேலைக்கூடத்தையும், வேலைஸ்தலத்தையும் அல்லது வேலைக் கட்டிடத்தையும் சுற்றி யிருக்கவேண்டும். இவைகளிருக்கும் ஸ்தலத்திற்குள்ளாகவும், சுலபமாக போய் வருவதற்கு சௌகரியமுள்ளதும், பிரதான கட்டிடங்களிலிருந்து விலகியும் கக்கூசுகள் அமைக்கப்படவேண்டும். இந்த வேலை ஸ்தலங்களில் பெண்களும் வேலை செய்வார்களாகில், அவர்களுக்கு பிரத்தியேகமாகவும், ஆண் மக்கள் உபயோகிக்கும் கக்கூசுகளிலிருந்து மறைக்கப்பட்டதாகிய கக்கூசுகள் அமைக்கப்படவேண்டும். ஆண் மக்கட்கும் பெண்டிர்கட்கும் கீழ் குறிப்பிடும் அளவிற்கு குறைவில்லாமல் கக்கூசுகள் கட்டப்படவேண்டும்.

ப்ளஷ் அவுட் கக்கூசுகள்.

A. ஆண்கள்.

பிரத்தியேக மூத்திரக் குழிகள் (urinals) அமைக்கப்படின்—	உட்காருமிடங்கள்.
ஆண் வேலையாட்கள் 100-க்கு அதிகமில்லாத ஸ்தலத்தில்.	ஒவ்வொரு 25 பேருக்கும் அல்லது 25-ன் அம்சத்திற்கும் ஒன்று வீதம்.
100-க்கு அதிகம் வேலையாட்களுள்ள ஸ்தலம்.	முதல் 100-க்கு 4-ம், 100-க்கு அதிகமுள்ள ஒவ்வொரு 40-க்கும் அல்லது 40-ன் பாகத்திற்கும் ஒன்று வீதமும்.

பிரத்தியேக மூத்திரக் குழிகள் அமைக்கப் படவில்லையாகில்—	உட்காருமிடங்கள்.
ஆண் வேலையாட்கள் எத்தனை பேர் இருந்தாலும்.	ஒவ்வொரு 25 பேருக்கும் அல்லது 25 ன் பாகத்திற்கும் ஒன்று வீதம்.

B.—பெண்டிர்கள்.

பிரத்தியேக மூத்திரக் குழிகள் அமைத் திருந்தாலும் அல்லது அமைத்திருக்கா விடினும்—	உட்காருமிடங்கள்.
எத்தனை பேர்கள் வேலை செய்தாலும்.	ஒவ்வொரு 25 பேருக்கும் அல்லது 25-ன் பாகத்திற்கும் ஒன்று வீதம்.

ப்ளஷ் அவுட்டல்லாத கக்கூசுகள்.

A.—ஆண்கள்.

பிரத்தியேக மூத்திரக் குழிகள் அமைக்கப் பட்டிருந்தாலும் அல்லது இல்லையானாலும்—	உட்காருமிடங்கள்.
ஆண் வேலையாட்கள் 10-க்கு அதிகப் படாத ஸ்தலங்களில்.	ஒன்று.
வேலையாட்கள் 10-க்கு அதிகமும், 25-க்கு அதிகப்படாமலும் இருக்கும் ஸ்தலங்களில்.	இரண்டு.
ஆண் வேலையாட்கள் 50-க்கு அதிகமாகவிருக்கும் ஸ்தலங்களில்.	முதல் 50 பேருக்கு மூன்றும், 50-க்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 பேருக்கும் ஒன்று வீதமும்.

B.—பெண்டிர்கள்.

(ஆண் மக்களுக்குள்ள அளவு போலவே).

விவரணம் 1.—"ப்ளஷ் அவுட்டல்லாத கக்கூசுகள்" என்பது தண்ணீரால் அலம்ப முடியாதவைகளைக் குறிப்பிடும்.

விவரணம் 2.—கீழ் குறிப்பிடும் விதம் செய்யவில்லையானால் இந்த ரூல்படி பிரத்தியேக மூத்திரக் குழிகள் அமைக்கப்படவில்லை யென்று கருதப்படும் :—

(1) மூத்திரக் குழி வெளி முற்றமானால், 100 வேலையாட்களுக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் குறைந்தது 20 சதுர அடி ஸ்தலம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்,

(2) மூத்திரக் குழிகள் அறைகளாகத் தடுக்கப்பட்டிருந்தால் :

(a) 50 வேலையாட்களுக்கும் 50-ன் பாகத்திற்கும் ஒன்று வீதமும்,

(b) சுகாதார எஞ்சினீயரின் டிஸைன் நெம்பர் 137/1928-ன்படியும் அவர் அவ்வப்பொழுது சீர்திருத்தம் செய்யும்படியும் மூத்திரக் குழிகள் அமைத்திருக்கவேண்டும்.

தென்கன்னட புத்தூர் தாலுகாப் பஞ்சாயத்து போர்டுகளின் இரண்டாவது மகாநாடு.

(1931-ஆம் ஏப்ரல்மீ 20உ போர்டு உயர்தர எலிமென்டரி பள்ளிக்கூடத்தில் நிறைவேறியது.)

இந்த தாலுக்காவில் மொத்தம் பஞ்சாயத்துக்கள் 82. இந்த மகாநாடுக்கு 46 பஞ்சாயத்துக்களிலிருந்து 64 பிரதிநிதிகள் வந்திருந்தனர். புத்தூர் தாலுகா போர்டு பிரசிடெண்டு, ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர், கூட்டுறவு சங்கங்களின் டிப்டி ரிஜிஸ்திரார், ஸ்தல தாசில்தார், ஸ்தல சப் மாஜிஸ்திரேட், தாலுக்காவைச் சார்ந்த இரண்டு பஞ்சாயத்து ஓவர்சியர்கள், இரண்டு சூபர்வைசர்கள்—இவர்களும் விஜயம் செய்திருந்தனர்.

10-மணிக்கு மகாநாட்டின் இன்பார்மல் சபை கூடியது. அப்பொழுது சென்ற வருஷம் ஒவ்வொரு பஞ்சாயத்து விஷயங்களிலும் என்னென்ன வேலைகள் நடத்தப் பட்டனவென்பதை டெலிகேட்டுகள் கவனித்தனர். கீழ் குறிப்பிடும் விதம் அவர்களுக்குத் தெரியவந்தது.

1	பெல்டன் காடி டிவிஷனைச் சேர்ந்த பஞ்சாயத்துக்கள் ...	21
	புத்தூர் „ „ ...	61
	மொத்தம் ...	82

2. இந்த தாலுகாவிலுள்ள 184 கிராமங்களில் 89 கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன.

3. மேல் பார்வை.—இரண்டு சூபர்வைசர்கள் இதை செய்து வந்தனர். பெல்டன் காடி டிவிஷனுக்கு ஒருவரும் புத்தூர் டிவிஷனுக்கு மற்றொருவருமாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். பெல்டன் காடி சூபர்வைசரின் செலவு முழுதும் புத்தூர் டிவிஷன் சூபர்வைசரின் செலவில் பாதியும் ஜில்லா போர்டு கொடுக்கின்றது.

	சென்ற வருஷங்களில்	1930-31.	மொத்தம்.
4. போக்குவரத்து.—	ரூ.	ரூ.	ரூ.
A. (1) புத்தூர் டிவிஷனில் கவர்ன்மெண்டாரிடமிருந்து கிடைத்த பொருளுதவி ...	1,447	6,955	8,402
(2) பெல்டன்காடி டிவிஷனில் கவர்மெண்டாரிடமிருந்து கிடைத்தப் பொருளுதவி ...	...	6,332	6,332
மொத்தம் ...	1,447	13,287	14,734

	நம்பர்.	1930-31 வரை செய்த வேலைகளின் விலை மதிப்பு.	மீதி.
		ரூ.	
B முடிவு பெருத வேலைகள்.—			
புத்தூர் டிவிஷன் ...	21	16,804	19,589
பெல்டன்காடி டிவிஷன் ...	10	12,664	6,833
	31	29,468	26,422

C. சர்க்கார் அரைவிகிதப் பொருளுதவியின் அனுமதியை நாடும் எஸ்டிமேட்டுகள் —

	நம்பர்.	தொகை. ரூ.
புத்தூர் டிவிஷன் ...	4	5,460
பெல்டன்காடி ...	8	5,780

D. சர்க்காரால் கேட்கப்பட்ட எஸ்டிமேட்டுகள்.—

	நம்பர்.
புத்தூர் டிவிஷன் ...	23
பெல்டன்காடி ...	7

5. பொது ஜன சுகாதாரம்.—

A. புத்தூர், விட்டல், உப்பிறன்காடி, பெல்டன்காடி, குருவாயக்கர், அல்லிய—இந்த பஞ்சாயத்துக்கள் பெரிய கிராமங்களின் சுகாதாரங்களை கவனித்தன.

B. விளக்குப் போடுவது.—

	பஞ்சாயத்துக்களின் பெயர்.	விளக்குகளின் எண்ணிக்கை.
1.	புத்தூர்	24
2.	விட்டல்	5
3.	அல்லிய	3
4.	உப்பிறன்காடி	6
5.	குருவாயக்கர்	4
6.	பெல்டன்காடி	4

C. குடி ஜல சப்ளை.—

		இணைப்புகளின் எண்ணிக்கை.	சர்க்காரின் பொருளுதவி. ரூ.	மொத்த எஸ்டிமேட் செலவு. ரூ.
(1) முடிவு பெற்றவை—				
பெல்டன்காடி டிவிஷன்	...	2	1,750	875
புத்தூர் ,,	...		...	...
(2) முடிவு பெறாதவை—				
பெல்டன்காடி டிவிஷன்	...	1	825	120
புத்தூர் ,,	...	1	900	130
(3) சர்க்காரால் அனுமதிக்கப்பட்டதும் வேலை ஆரம்பிக்க வேண்டியவைகளும்—				
பெல்டன்காடி டிவிஷன்	...	1	895	...
புத்தூர் ,,	...	2	1,475	...
(4) தயாராகியதும் சர்க்காரின் அனுமதியை நாடுகின்றதுமான எஸ்டிமேட்டுகள்—				
புத்தூர் டிவிஷன்	...	...	...	...
பெல்டன்காடி ,,	...	...	...	...
(5) அவசியப்பட்ட எஸ்டிமேட்டுகள்—				
புத்தூர் டிவிஷன்	...	6	...	...
பெல்டன்காடி ,,	...	6	...	...
மொத்தம்	...	19	5,845	1,125

6. கல்வி—

A. பள்ளிக்கூடங்கள்—பொராபுப் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடம் முடிவாக நிறுத்தப்பட்டது. அதைத் தவிர 45 பஞ்சாயத்துக்கள் 26 பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. புத்தூர் பஞ்சாயத்து மாத்திரமே இரண்டு பள்ளிக்கூடங்களை நடத்துகின்றது. 51 உபாத்தியாயர்கள் இந்த பள்ளிக்கூடங்களில் இருக்கின்றனர். இவர்களில் விசேஷ கல்விகற்ற (ட்ரெயின்டு) உபாத்தியாயர்கள் இரண்டு பேர்கள். இந்த உபாத்தியாயர்களுக்காக கொடுக்கப்படும் வருஷா வருஷ உதவிப்பணம் ரூ. 9,000.

சொந்தமான கட்டிடங்கள் உள்ளவை—

			பள்ளிக்கூடங்கள்.
ஓடிட்டது	...	...	22
கூரை போட்டது	...	...	13
கட்டிடங்கள் தேவையுள்ளவைகள்		...	11
			46

1930-31-ல் சர்க்காரிடமிருந்து பெற்ற பொருளுதவி—

பள்ளிக்கூடங்கள்	...	...	6
சர்க்கார் கிராண்டு	...	...	ரூ. 4,765

பொது புத்தக சாலைகள்—

	1929-30 வரை.	1930-31-ல்.	மொத்தம்.
புத்தகசாலைகளின் எண் ...	29	4	33
பெற்ற பொருளுதவி ரூபா.	3,009	540	3,549

மகாநாட்டின் பொதுக்கூட்டம் சாயங்காலம் 3·25-க்கு ஆரம்பித்தது. தென் கன்னடத்தின் கலெக்டர் மிஸ்டர் ஜெ. ஹூசெயின் பார் அட் லா அதைத் திறந்தார். அவருடைய பிரசங்கத்தில் வருங்காலத்தில் பஞ்சாயத்துக்கள் ஜனங்களுக்கு எவ்வாறு சமாதானத்தையும், சந்தோஷத்தையும், அபிவிருத்தியையும் அளிக்கக் கூடும் என்பதை அவர் எடுத்துக்காட்டினார். அம் மகாநாட்டில் வந்திருந்த பஞ்சாயத்தார்களெல்லோரும் அவரவர்களின் நலத்தை மாத்திரம் கருதாமல் பொதுநலத்திற்காக ஊழியம் செய்யவேண்டுமென்று அவர் உபதேசித்தார்.

பிறகு மகாநாட்டின் தலைவர் Mr. M. சிவராவ் அக்கிராசனம் வகித்தார். கீழ் குறிப்பிடும் தீர்மானங்கள் ஏக மனதோடு நிறைவேற்றப்பட்டன :—

I. சென்னை லோக்கல் போர்ட்ஸ் சட்டத்தையும் அதன்கீழ் ஏற்படுத்தியிருக்கும் ரூல்களையும் கன்னடபாஷையில் கூடிய சீக்கிரத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்று இந்த மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்கின்றது. கவர்ன்மெண்டாரின் பஞ்சாயத்து சம்பந்தமான சகல கட்டளைகளையும், அல்லது அவைகளின் சாரத்தையாவது கன்னட பாஷையில் மொழிபெயர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

II. சாதாரணமாகப் பஞ்சாயத்துப் பொதுக் கூட்டங்களுக்கும் பஞ்சாயத்து ஆபீசுக்கும் தகுந்த கட்டிடம் இல்லாததினால் பஞ்சாயத்துக்களுக்கு தேவையேற்படுகின்றபொழுதெல்லாம் போர்டு பள்ளிக்கூட கட்டிடங்களை உபயோகித்துக் கொள்ள அனுமதிக்கவேண்டுமென்று புத்தூர் தாலூகா போர்டை இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

III. 1930-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பெல்டன்காடி டிவிஷனில் கிராமப் புனருத்தாரணத்திற்கு ஒரு ஏற்பாடு செய்ததற்கு இந்த மகாநாடு ஜில்லா போர்டாரை நன்றிபாராட்டுகிறது. ஆயினும், இந்த வருஷ வரவு செலவு

திட்டத்தில் கிராம புனருத்தாரணத்திற்காகவுள்ள பணத்தை முட்கி என்ற ஸ்தலத்தில் புதிய பள்ளிக்கூடமொன்றை கட்டுவதற்காக நீக்கிவைத்திருக்கிறதாகவும், சட்டப்படி கிராம அபிவிருத்தி நிதியிலிருந்து இதற்குப் பணம் கிடைக்காவிட்டால் இந்தக்கிராம புனருத்தாரண எற்பாட்டை நிறுத்திவிடவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்திருப்பதாகவும் இந்த மகாநாடு கேட்கிறது. இதற்காக இம்மகாநாடு மிகவும் வருந்துகிறது. பொதுநலத்தைக் கருதுகையில் இவ்வேலைக்கு எல்லோரும் ஆதரவளிக்கவேண்டும். மேலும், இப்பொழுது ஆரம்பித்த நல்லவேலையின் பலன் இந்த ஏற்பாட்டை நிறுத்திவிட்டால் பெறுவது அசாத்தியமாகும். இக்காரணங்களுக்காக இந்தக் கிராம புனருத்தாரண ஏற்பாட்டை நிறுத்தக்கூடாதென்று ஜில்லா போர்டாரை இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

IV. இந்த மகாநாடு புத்தூர் தாலுகாபோர்டின் முன் ஒரு சமாசாரத்தைத் தெரியப்படுத்துகின்றது. அதாவது, புத்தூர் பஞ்சாயத்து சூபர்வைசரின் கவனத்திலிருக்கும் ஸ்தலமும் பஞ்சாயத்துக்களும் மிகவும் அதிகமானவையாதலால் அவருக்குச் சரியான திராணியோடு வேலைசெய்ய அசாத்தியமாயிருக்கிறது. புத்தூர்டிவிஷனுக்குக் கூடுதலாக இரண்டு சூபர்வைசர்களை நியமிக்கவேண்டுமென்று புத்தூர் தாலுகா போர்டை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது. மேலும் இந்த சூபர்வைசருக்கு காட்டுவழிகளில் நடக்கவும், பிரவாக நதிகளை கடக்கவும் வேண்டும். அவருடைய தேகத்திற்கு ஹானி ஒன்றும் சம்பவிக்காமல் ரட்சிக்க ஒவ்வொரு சூபர்வைசருக்கும் ஒரு சேவகனை கொடுக்கவேண்டுமென்று புத்தூர் தாலூகா போர்டை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

V. கிராமாந்தரங்களில் நல்ல குடி ஜலத்திற்கு சௌகரியங்கள் அமைக்கப் பணமில்லாததால் பஞ்சாயத்துக்கள் வெளி ஸ்தாபனங்களின் பண சகாயத்தை நாடுகின்றன. ஆதலால் ஜில்லாபோர்டின் அதீனத்திலுள்ள கிராம அபிவிருத்தி நிதியை கையாளும் கமிட்டி ஏதேனும் பஞ்சாயத்து இவ்விஷயமாக பண உதவியைக் கேட்டால் குறிப்பிட்டவேலைக்கு வேண்டிய பணத்தில் நாலில் ஒரு பாகம் அதற்குக் கொடுக்கவேண்டுமென்று இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

VI. பாலங்கள், கள்வர்ட்டுகள், சிற்பவேலைகள் இவைகளைச் செய்வதற்கு வெளி ஸ்தலங்களிலிருந்து விலைபெற்ற சாமான்களும் நிபுணர்களான சிற்பர்களும் அவசியமாகும். ஆகையால் இவ்வேலைகள் செய்ய பணமில்லாமல் பஞ்சாயத்துக்கள் வருந்துகின்றன. இவ்வேலைகளுக்காக ஏதேனும் பஞ்சாயத்துப் பண உதவியை நாடினால் கிராம அபிவிருத்தி நிதியை ஆளும் கமிட்டி அந்தப் பஞ்சாயத்துக்கு நாலில் ஒரு பங்கு கிராண்டு கொடுக்கவேண்டுமென்று இந்த மகா நாடு கேட்டுக்கொள்கிறது.

VII. கிராம ரஸ்தாக்கள் அமைக்கும் முன் ரவினியூ அதிகாரிகளின் சம்மதம் வேண்டுமென்று அவர்கள் கட்டாயப் படுத்தக் கூடாதென்றும், அந்த ரஸ்தாக்களிலிருக்கும் மரங்களை வெட்டுவதற்கு அவர்களின் பிரத்தியேக சம்மதம் வேண்டுமென்று கேட்கக் கூடாதென்றும் அவர்களை இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

VIII. சர்க்காரின் தரிசுகளை பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கும் பொழுது ஆதிபத்திய பணத்தை அரசாங்கத்தார் பெற்றுக்கொள்கிறார். நீக்கிக்கொடுக்கும் கட்டளையில் குறிப்பிட்ட நிபந்தனைகளை பஞ்சாயத்துக்கள் நிறவேற்றவில்லையானால் அந்த தரிசுகளை சர்க்கார் திரும்ப எடுத்துக்கொள்கிறார். பஞ்சாயத்துக்களுக்கு அதே தரிசுகளை மீண்டும் கொடுக்கும் பொழுது சர்க்கார் ஆதிபத்திய பணத்தை இரண்டாவது தடவை கேட்கக்கூடாதென்று இந்த மகாநாடு அவர்களுடன் விண்ணப்பம் செய்து கொள்கிறது.

IX. ஜனங்கள் பஞ்சாயத்து புத்தக சாலைகளிலுள்ள நூல்களை அதிகமாக வாசிக்கவேண்டுமானால் அவர்களிடமிருந்து பீஸுகள் வாங்கக் கூடாதென்று இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. ஆனால் புத்தகங்களை திரும்பிக்கொடுக்கிறதற்காக குறிப்பிட்ட பணத்தை ஜனங்கள் டிப்பாசிட்டு செய்யவேண்டுமென்று பஞ்சாயத்துக்கள் நிபந்தனை செய்யலாம். இந்த நிபந்தனை அதாது பஞ்சாயத்தின் மனதைப் பொறுத்திருக்கிறது.

X. 1931-ம் ஆு ஏப்ரல்மீ 18, 19-ம் தேதிகளில் கூடின உயர் எலிமென்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்த மகாநாடு கவனித்தது. அதாவது, பஞ்சாயத்து புத்தகசாலைகளிலிருந்து உயர்தர எலிமென்டரி பள்ளிக்கூட மாணவர்களின் உபயோகத்திற்காக ஒவ்வொரு தடவையிலும் 20, 25 புத்தகங்கள் அதாது பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயரின் பொறுப்பில்கொடுக்கவேண்டும். இதற்கு பீஸோ, அல்லது டிபாசிட்டு பணமோ ஒன்றுமே கேட்கக்கூடாது. இந்த மகாநாடு அவர்களின் தீர்மானத்தோடு இசைகிறது. உயர்தர எலிமென்டரி பள்ளிக்கூடங்களிலிருக்கின்ற பஞ்சாயத்துக்கள், அவைகளின் அதீனத்தில் புத்தகசாலைகள் இருக்குமாகில், இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அவைகளை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

XI. உபாத்தியாயர்களின் மத்திய மீட்டிங்குகளுக்குப் பஞ்சாயத்து உபாத்தியாயர்கள், போகிறார்களா,அல்லது போகவில்லையா என்பதை கவனித்து அவர்களைப் போவதற்கு கட்டாயப்படுத்தவேண்டுமென்று 1931-ம் ஆு ஏப்ரல் 19-ம் உ கூடின புத்தூர் தானுகா எலிமென்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தோடு இந்த மகாநாடு இசைகின்றது. வேணுமென்றாவது, அல்லது அலட்சியத்தாலாவது இந்த மீட்டிங்குகளுக்குப் போகாத உபாத்தியாயர்களை தகுந்தபடி சிட்சிக்கவேண்டுமென்று எல்லாப் பஞ்சாயத்துக்களையும் இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

XII. தாலூகாபோர்டு பள்ளிக்கூடங்களிலுள்ள வழக்கப்படி, பள்ளிக்கூடங்களை வைத்துக்கொண்டிருக்கும் எல்லா பஞ்சாயத்துக்களும், அப்பள்ளிக்கூடங்களில் ஒரு உபாத்தியாயரே இருப்பாரானால் அவருக்கு மாதம் 8 அணாவும், உதவி உபாத்தியாயர்கள் இருப்பார்களானால் ஒவ்வொருவருக்கும் 4 அணா வீதமும், கடிதம், சாக்கு, டஸ்டர், துடைப்பம் முதலிய சாமான்களுக்காக கொடுக்கவேண்டுமென்று எல்லா பஞ்சாயத்துக்களையும் இந்த மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

XIII. பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களுக்கு 1930-31ல் கொடுத்த பொருளுதவிக்காக லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டருடன் இந்த மகாநாடு நன்றி

பாராட்டுகின்றது. இந்த தாலூகாவிலுள்ள பஞ்சாயத்துக்களின் வறுமையை கவனித்தும், இந்த தாலூகாவின் தாரித்திரியத்தையும் அபிவிருத்தியில்லாமையும் கவனித்தும் இவ்வருடத்தில் இந்த தாலூகாவிற்கு பிரயத்தியேகமாக பாதிப் பொருளுதவி கொடுக்கவேண்டுமென்று லோக்கல் போர்டுகளின் இன்ஸ்பெக்டரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

XIV. பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களின் திராணியை உத்தேசித்து ஸெகன்டரி வகுப்பல்லாத இதர பயிர்ச்சி பெற்ற உபாத்தியாயர்களை நியமிக்கும் பஞ்சாயத்துக்களுக்கு கூடுதல் விகிதம் உபாத்தியாயர் கிராண்டு கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

XV. இந்த மகாநாட்டின் தீர்மனத்தைச் சம்பந்தித்த அதிகாரிகளுக்கும் ஆட்களுக்கும் தெரிவிக்க இந்த மகாநாடு தலைவருக்கு அதிகாரம் கொடுக்கின்றது.

பிறகு புத்தூர் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு, ஜனுப் ஹசல்லாதி ஹுஸென் சாஹிப் பஹதூர் வந்திருந்த பிரதிநிதிகள், இதர விருந்தினர், உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தரல்லாதவர்கள் எல்லோருக்கும் தேயிலையும், சிற்றுண்டியும் ஏராளமாக அளித்தார்.

பிறகு எல்லோரும் பள்ளிக்கூடத்திற்கு வெளியிலுள்ள மைதானத்திற்குச் சென்றார்கள். இவ்விடத்திய் புத்தூர் போர்டு உயர்தர எலிமென்டரி பள்ளிக்கூட மாணவர்கள், அவர்களின் அப்பியாச உபாத்தியாயர் B. M. பலிகாவின் மேற்பார்வையில் அநேகவித தேக அப்பியாசங்களைக் காண்பித்தார்கள். அவைகளைப்பார்த்துக்கொண்டு அன்றைதினத்தை அவர் கழித்தனர்.

M. சிவாரவ்,
சேர்மன், புத்தூர்.

கேரளச் சந்தன சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையுமளிக்கும் சோப்பு இதுவே.

கோடையில் குளிமையையும் பரிமளத்தையும் கொடுக்கும் வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரள சோப்பு இன்ஸ்டியூட்,
கள்ளிக்கோட்டை.

விவசாயிக்குத் தெரியவேண்டும் விஷயங்கள்.

பசுக்களை போற்றும் முறை.

1931ஞு மேமீ 17உ வெளிவந்த "ஹிந்து வாரப்பத்திரிகையில்" மிகவும் அற்புதமான ஒரு பசுவினுடையதும் அதன் கன்றினுடையதும் படத்தை நாம் காணலாம். அவை அமெரிக்கா ஐக்கிய நாட்டைச் சேர்ந்தவை. அப்பசுவே உலகத்திலுள்ள எல்லா பசுக்களிலும் கூடுதலாக பால் கறக்கிறது. ஒரு வருஷத்தில் 37,000 பவுண்டு பால் அந்த பசு கொடுத்திருக்கிறது. அதாவது நாள் ஒன்றுக்கு 33 படி பாலாகும். இதற்காக ஐக்கிய நாடுகளின் தலை நகராகிய வாஷிங்டனில் அப்பசுவினுடையதும் கன்றினுடையதும் சுற்பதிமை ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஐக்கிய நாட்டார் இவ்விதம் பசுக்களை போற்றுகின்றனர். பசுக்களை தெய்வமாகக் கொண்டாடுகிற நமது பாரத தேசத்தின் நிலைமையை ஐக்கிய நாட்டின் நிலைமையோடு ஒப்பிடுவோமானால் அது எவ்வளவு பரிதாபகரமாகவிருக்கின்றது.

எகிப்து தேசத்தில் நெல் பயிர்.

எகிப்து தேசத்தில் நைல்நதியில் சாதாரணமாய் எவ்வளவு ஜலம் போகுமோ அதில் பாதியே இவ்வருஷம் ஓடுகின்றதாம். ஆதலால் இவ்வருஷம் நெல் பயிர் செய்யாமலிருக்கலாமென்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

சோய்னு கோண்டாட்டம்.

மலேரியா ஜுரத்திற்கு ஏற்ற மருந்து கொய்னு வென்று கண்டு பிடித்து இப்பொழுது 300 வருடங்களாகுகின்றன. கொஞ்ச நாட்களுக்கு முன் இதை மக்கள்கள் கொண்டாடினது மிகவும் மெச்ச வேண்டும் காரியமாகும். ஆனால் நமது நாட்டில் கைதேர்ந்த அனேகம் ஆயுர்வேத மருந்துகள் இருக்கின்றன. ஒவ்வொரு தினம் ஒரு ஆயுர்வேத ஔஷதத்தைக் கொண்டாடுவதாக நாம் நினைத்தால் வருஷ 365 தினங்களும் அதற்குப் போதுமோவென்று எவனும் சம்சயிக்கக்கூடும்.

விவசாயமே உயிர்த்தொழில்.

ஐக்கிய நாடுகளின் செழிப்பும் வறுமையும்.

1830ஞு அமெரிக்க ஐக்கிய நாட்டாரில் 100-க்கு 93-வீதம் விவசாயம் செய்துகொண்டு நாட்டுபுறங்களிலும் மீதி 7 வீதமே நகரங்களிலும் வசித்து வந்தனர். இப்பொழுது, 100 வருஷகாலம் கழிந்திருக்கின்றன. 38% நாட்டுப் புறங்களிலும் 62% நகரங்களிலும் தாமதிக்கின்றனர். 100 வருடங்களுக்கு முன் விவசாயிகள் தமக்கும் நகரவாசிகட்கும் போதுமான உணவு பொருள்களை உற்பத்தி செய்வதற்கு மிக்க சிரமப் பட்டார்கள். ஆனல் இப்பொழுது நாட்டுப்புறங்களில் தாமதிக்கின்ற 38% ஜனங்கள் அவ்விடத்து ஜனங்களுக்கு வேண்டிய உணவு பொருள்களை மாத்திரமன்றி உற்பத்தி செய்கின்றனர். நகரவாசிகளுக்கு வேண்டிய பொருள்களையும் இந்த 38% விவசாயிகளே பயிர் செய்கின்றனர். மேலும், நவீன காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து வெளி நாடுகளுக்குக் கூட உணவு பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது மிகவும் அற்புதமாகத் தோன்றும். இதற்கு காரணம் இயந்திரங்களைக் கொண்டு விவசாயம் செய்வதாகும்.

நியூ யார்க்கு இராஜ்ய விவசாய, சந்தை இலாகா இந்த நிலைமையைக் குறித்து இவ்வாறு அபிப்பிராயப் படுகின்றது. "இச் செழிப்பின் மத்தியிலும் ஐக்கிய நாடுகளில் அனேகர் வறுமையால் உண்பதற்கும் உடுப்பதற்கும் கதியற்றவராய் வருந்துகின்றனர். ஒவ்வொரு வருடமும் தோட்டங்களில் ஏராளமான விவசாயப் பொருள்கள் கவனிப்பாரன்றி கெட்டுப் போகின்றன. இந்த இராஜ்ய ஜனங்களின் ஸ்திதியை கவனிக்குமளவில், நாம் கூடுதலாக சாகுபடி செய்கிறோம் என்று சொல்ல முடியாது. நாம் வேண்டுமளவு உண்பதில்லை என்றே எண்ணவேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் சாமான்களை உபயோகிக்கும் மனிதனின் சமீபத்திற்கு அவைகளைக் கொண்டுபோய் அவனுடைய சக்திக் கிசைந்த விலையில் விற்க நமக்குப் பிரசாயமாக இருக்கின்றதே ஆகும்."

இந்த கவர்ன்மெண்டு இலாகா அக்கிரகையின் பொருள் என்னவென்பதை நாம் கவனிப்போம். விற்பனை விஷயத்தில் இன்னும் அதிகம் சிரத்தை நாம் செலுத்த வேண்டுமென்று அது வற்புறுத்துகிறது என்று விளங்குகிறது.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் அளவுக்கதிகமான உற்பத்தி.

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் விவசாய போர்டு ஒன்று இருக்கின்றது. விவசாயிகள் உருளக்கிழங்கு, புகையிலை, பருத்தி இவைகள் உற்பத்தி செய்யும் நிலங்களை குறைக்க வேண்டுமென்று அந்த போர்டு உபதேசிக்கிறது. அந்த போர்டின் வைஸ் சேர்மன் Mr. C. C. டீஜ் உருளக்கிழங்கு அதிகம் பயிரிடுவதால் மட்டமான இந்த விலையும் குறைந்து விடுமென்றும், பயிர் செய்வோர் எல்லோரும் கெட்டுப் போவார்கள் என்றும் அறிவித்திருக்கிறார். தெற்குநாடுகளில் பிரதான சாகுபடி சாமான்களாகிய புகையிலையும் பருத்தியும் அளவிற்கதிகம் உற்பத்தி செய்யப்படுகிறதென்று போர்டின் சேர்மன் ஜெயிம்ஸ். வி. ஸ்டோன் கூறியுளார் இவ்விதம் ஏராளமாக சாமான்கள் மீதியிருப்பதாலேயே விலைகள் குன்றி இருக்கின்றன. பயிரிடுவோர்கள் தமது சாமான்களை தகுந்தவிலைக்கு விற்பனை செய்ய வேண்டுமாகில் முதன் முதலில் அளவிற் கதிகம் தாம் உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டும்.

ஐக்கிய நாட்டின் தன நிலைமை.

"அமெரிக்கா பொருளாதார பரிசோதனை" என்ற பத்திரிகையின் 1931 ௵ மார்ச்சு மீ இதழில், கார்டினர் வி. மீன்ஸ் ஐக்கிய நாட்டுத் தொழிலைப் பற்றிய தமது ஆராய்ச்சியை பிரசுரித்திருக்கிறார். தொழில் தனத்தில் சர்க்கார், விவசாயிகள், உத்தியோகஸ்தர்கள் இவர்களின் தனத்தை அவர் சேர்க்கவில்லை. இதர தொழில் தனத்தில் 35% முதல் 45% வரையுள்ளவை முழுதும் 200 ஸ்தாபனங்களின் (Corporation) அதீனத்திலிருக்கின்றன. இந்த ஸ்தாபனங்கள் மிகவும் பெரிதானவைகள். ஒவ்வொன்றிற்கும் 8 கோடி 50 லக்ஷம் டாலர் ஆஸ்தி (assets) யுண்டு. செலவு போக ஒவ்வொன்றின் வருமானமும் (net income) 45 லக்ஷம் டாலராகும். 1927 ௵ ஸ்தாபனங்களின் மொத்த ஆஸ்தி 6,700 கோடி டாலருக்கதிகமாக விருந்தது. இராஜ்யத்திலுள்ள ஸ்தாபனங்களின் மொத்த தனத்தில் ஏகதேசம் பாதிதனம் அவைகளின் அதிகாரத்திலடங்கியிருக்கின்றது. ஐக்கிய நாட்டு கைத்தொழில்களில் பாதிக்கதிகமாகவே அவைகளின் ஆதீனத்தில் இருக்கின்றது.

நவீன காலத்தில் ஐக்கிய நாட்டிலுள்ள சிறு ஸ்தாபனங்களின் எண் 3 லக்ஷம். இந்த சிறு ஸ்தாபனங்களைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக ஊக்கத்துடன் அவை வளர்ந்தோங்குகின்றன. இதே மாதிரியில் அவை வளருமாகில் இன்னும் 20 வருடங்களில் ஐக்கிய நாட்டின் தனத்தில் பாதி அவைகளின் அதீனத்தில் வந்துவிடும். அவைகளின் டயரக்டர்களின் எண்ணிக்கையோவெனில் 2,000-க்குக் குறைவாகவே இருக்கின்றது.

கடன் தீர்க்கும் சட்டம்.

கானடா தேசத்தில் மானிட்டோபா என்ற மாகாணத்தில் கடன் தீர்க்கும் சட்டமொன்று ஏற்படுத்தி யிருப்பதை "ஸ்கூப் ஷாவல்" என்ற விவசாயக் கூட்டுறவு பத்திரிகையில் நாம் வாசிக்கலாம். இச்சட்டம் மானிட்டோபா சட்ட சபையால் ஏற்படுத்தப்பட்டது. கடன்காரர்களுக்கு சௌகரியங்கள் கொடுப்பது அதன் உத்தேசம். கடன் தீர்க்கும் அதிகாரி (கமீஷனர்) ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். கடன் கொடுத்தவனும் வாங்கினவனும் அவர் முன் சென்று கடனை தீர்ப்பதற்கு வேண்டிய முறைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அம்முறைகளை அவர்கள் சரிவர நடத்துகிறார்களாவென்று கவனிக்கவும், நடத்தவில்லையானல் யார் நடத்தவில்லையோ அவனை சிட்சிக்கவும் அந்த கமிஷனருக்கு சட்டப்படி அதிகாரங்கள் கொடுக்கம்பட்டிருக்கின்றன. அச்சட்டத்தின் கருத்தாவது:—மானிட்டோபா மாகாணத்திலுள்ள எந்த விவசாயியாவது அல்லது சொந்த வீட்டில் வசிக்கும் எந்த மனிதனுவது தனது கடனைப்பற்றி வருத்தமடைவானுகில், அவன் இந்த கமிஷனருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவனுக்கும் கடன் கொடுத்தவனுக்கும் சம்மதமான வழியில் அக்கடனை தீர்ப்பதற்கு அவர் ஏற்பாடு செய்வார். கடன் காரனின் ஸ்திதியை அவர் முதன் முதலில் கேட்டு அறிந்துகொள்வார். அதன்மேல் அவர்களுக்கு ஒரு சர்டிபிக்கட்டை அவர் கொடுப்பார். வஸ்துவை விற்பது, ஈடு முடிந்தவுடன் வஸ்துவை பணம் கொடுத்து மீண்டும் எடுத்துக்கொள்வது, கிஸ்து பாக்கிக்காக நிலத்தை விற்று சுவாதீனப் படுத்துவது, எக்ஸிக்யூஷன் பேரில் வஸ்துவை பறிமுதல் செய்வது முதல்போன்ற சில கஷ்டங்களிலிருந்து, சட்டத்தின் சிலப்ரோவிஷன்களின் படி, இந்த சர்ட்டிபிக்கெட்டு அவர்களை காப்பாற்றும். இச் சட்டத்தால் நலம் பெறுவதற்கு உத்தேசிக்கிறவர்கள் வின்னிபெக்கில் இருக்கும் கமிஷனரோடு கடித மூலமாகக் கேட்டுக்கொள்ளலாம். இச்சட்டம் 1931ஷு ஏப்ரல்மீ 12உ முதல் 1933ஷு ஏப்ரல்மீ 1உ வரை அமுலிலிருக்கும். கடன் தீர்க்கும் கமிஷனரின் சர்டிபிக்கெட்டுகளும் 1933ஷு ஏப்ரல்மீ 1உ வரை உறுதியுள்ளதாயிருக்கும்.

பலவிதப் பயிர்களின் வெற்றி.

சென்ற வருஷத்தில் ஒரேஒரு பயிர் செய்யும் முறை மிக்கக் கடினமாக பரீட்சிக்கப்பட்டது. இராஜ்யங்களில் எல்லா ஸ்தலங்களிலும் அது போதாது என்று ஜனங்கள் அறியலானர். விலை மட்டத்தால் விவசாயியின் பண வருமானம் திடீரென்று குறைந்துவிட்டது. கறவைப் பசுக்களில் சில, 50 அல்லது 100 பிடைக் கோழிகள், 5 அல்லது 6 பன்றிகள் இவைகளும், இவைகளுக்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களும், மேலும் நிலங்களில் அநேகம் பயிர்களும் விவசாயிக்கிருக்குமாகில் அவன் வருமானம் கட்டாயமாக இவ்விதம் பூண்டோடு குறைந்திருக்காது. விவசாயத்தோடு மேல் குறிப்பிட்ட இதர தொழில்களுமுள்ள விவசாயியைக்காட்டிலும் நிலங்களில் அநேகம் தானியங்களை விதைத்தவர்களின் சாகுபடி சாமான்களே அதிகமாக விற்பனை செய்யப்பட்டன. ஆதலால் அவர்களின் வருமானம் அதிகம் குறையவில்லை. இவ்விதம் அநேகம் பயிர்களைச் செய்வதே உத்தம வழியென்று விவசாயிகளுக்கு நன்கு புலப்பட்டிருக்கின்றது.

கொவ்வூர் டிவிஷன் பஞ்சாயத்துக்களின் மகாநாடு.

சென்ற ஜூன்மீ 7உயில் இரகவரம் என்ற விடத்தில் மேற்குக் கோதாவரி ஜில்லாவைச் சர்ந்த கொவ்வூர், தனுகு தாலுகாக்களிலுள்ள பஞ்சாயத்துக்களின் மகாநாடு நிறைவேறியது. அந்த ஜில்லாவில் இவ்விஷயமாக மிகவும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்கின்ற ஸ்ரீமான் சனிவார சுப்பா ராவ் அந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். இந்தியாவின் உயிர் கிராமங்களென்று அவர் வற்புறுத்திக் கூறினர். அந்த கிராமங்களிலுள்ள புராதன ஸ்தாபனங்களெல்லாம் நசிப்பிக்கப்பட்டிருக்கின்றன. கிராமத்தின் வேலையாட்களென்று கூறப்படுகின்றவர்களும், அதன் தேவைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தவர்களுமாகிய ஆசாரி, தட்டான், குயவன், சாலியன் முதல்போன்ற மனிதர்கள் எங்கு மறைந்துவிட்டனரோ? இவர் பராமளித்த சாமான்களெல்லாம் தற்பொழுது வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. ஆதலால் கிராம வாழ்வு கெட்டுப்போயிற்று. அவ்விடங்களிலுள்ள வாசம் பொறுக்க முடியவில்லை. இக்கஷ்டங்களுக்கும் மேலாக நவீன கால படித்தத்தால் கிராம வாசிகளில் சிலர் சுதந்திரமாக சம்பாதிக்க சக்தியற்றவராய் வம்பர்களாய்த் திரிகின்றனர். வேலையில்லாமை யென்ற பேயானது நாடு முழுதும் விரித்து ஆடுகின்றது. ஆனல் இங்கிலாந்திலும் இதர இராஜ்யங்களிலும் அரசாங்கத்தார் வேலையில்லாதவர்களை அவர்களின் கஷ்டத்திலிருந்து விடுவிக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். இந்தியாவில் அவர்கள் திக்கற்று அலையவேண்டியது தான். நமது கஷ்டங்கள் இதோடு நின்று விடவில்லை. நமது நாட்டினரின் பெரும்பாலோரின் தொழிலாகிய விவசாயமும் ஆதாயமில்லாததாய் விட்டது. இதற்கு கிருஷ்ணு, கோதாவரி ஸெட்டில்மெண்ட் யாதாஸ்து தகுந்த அத்தாட்சியாகும். அதில் கூறியபடி 12 எக்ராக்களுக்குக் குறைந்த நிலங்களைப் பயிரிடுவோர்கள் அவர்களுக்கு நியாயமான விதத்தில் காலம் கழிக்கவேண்டிய நிலங்களை வைத்துக்கொள்ளவில்லையாம். 10 எக்ராக்களைப் பயிரிடுபவன் வருஷந்தோறும் 90 ரூபாய் கடன் வாங்கவேண்டியது தானும். இந்த கணக்கானது விவசாயத் தாக்கத்திற்கு முன் எடுத்த விலை வாசி கணக்கின்படியாகும். இப்பொழுது அவன் கதி யென்னவென்பது எல்லோரும் அறிந்துகொள்ளலாம்.

இத்தருணத்தில் ஸ்ரீமான் சுப்பா ராவ் பஞ்சாயத்தார்களை உசிதமான விதத்தில் எச்சரித்திருக்கிறார். கிராமத்தின் அபிவிருத்தி அவர்களின் அபிமானத்தையும் சுதந்திரத்தையும் மாத்திரமே பொறுத்திருக்கின்றதென்று அவர் அபிப்பிராயப்பட்டார். ரெவினியூ அதிகாரிகள், தாலுகா போர்டு, ஜில்லா போர்டு, ஜில்லா எஞ்சினியரிங் அதிகாரிகள் இவர்களைக் குறித்து அவர் அநேகம் புகார் கூறுகின்றார். இதற்கெல்லாம் காரணமென்னவெனின், ஒரு கிராமத்தில் ஊக்கமுள்ள பஞ்சாயத்து ஸ்தாபிக்குமளவில் இந்த அதிகாரிகளின் உரிமைகள் அறவே ஒழிந்துவிட வேண்டியதுதான். இவ்வித தர்க்கங்கள் ஏற்படக்கூடாதென்பது அவர் அபிப்பிராயம். பஞ்சாயத்துக்களின் அபிவிருத்தியால் மட்டுமே இந்தியாவின்

எதிர்கால அபிவிருத்தியும் வளர்ந்தோங்குமென்று எல்லோரும் கருதி, பஞ்சாயத்துக்களையும் பஞ்சாயத்தார்களையும் கௌரவத்துடனும் ஆதரவுடனும் பாராட்டவேண்டுமென்று எல்லோரையும் மிஸ்டர் சுப்பா ராவ் பிரத்தியேகமாக வேண்டிக்கொண்டிருக்கிறார். ஆங்கில பாஷை கற்காதவர்களும் ஆட்சி நிபுணர்களாகலாம் என்பதை அதிகாரிகளும் உணரவேண்டும். அவர்கள் தமது அதிகார அந்தஸ்தையும், எஜமான் என்ற எண்ணத்தையும் விட்டு பஞ்சாயத்தார்களுக்குத் தக்க உபதேசங்களைக் கொடுத்து அவர்களைச் சகாயிக்க முன் வரவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

இந்த பிரசங்கத்தில் பஞ்சாயத்துக்களுக்குக் கூடுதலாக சுதந்திரம் கொடுக்க வேண்டியிருப்பதை எல்லோருடைய கவனத்திற்கும் அவர் கொண்டுவந்தார். கிராமங்களிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களின் வேலைகளும் கிராமப் பஞ்சாயத்தென்ற ஒரு ஸ்தாபனத்திற்கே கொடுக்கவேண்டும். கிஸ்தி வசூலிப்பது அதன் வேலையாகும். அந்தப் பணத்தில் நாலில் ஒரு பாகம் கிராம நிதியைசேரவேண்டும் பஞ்சாயத்து ஆபீஸே கிராம ஆபீஸாகவிருக்கவேண்டும். மேலும் அந்த ஆபீஸ் நன்றாக கட்டப்பட்டிருக்கவேண்டும். அரசாங்கத்தார் கிராமத்தானுக்கு அளிக்கும் சகல உதவிகளும் பஞ்சாயத்தின் வழியாகவே கொடுக்கப்படவேண்டும் முடிவாக கிராமமே தேச பரிபாலனத்தின் அடிப்படி ஸ்தாபனமாக விருக்கவேண்டும். இந்த அஸ்திவாரமில்லாவிடில் தேச பரிபாலன கட்டிடமானது ஒரு நாளும் உறுதியுடனிருக்காது.

கீழ் குறிப்பிடும் மாறுதல்கள் இப்பொழுதே நடை பெறவேண்டுமென்று மிஸ்டர் சுப்பா ராவ் கூறியுள்ளார். பிரதான கிராமங்களும், சிறு கிராமங்களும் (hamlets) அதனதின் இஷ்டப்படி தனிப் பஞ்சாயத்துக்களை அமைத்துக்கொள்ள உரிமை பெறவேண்டும். தற்காலத்தில் அவை ஒன்றாகக் கருதப்படுகின்றன. இந்த வழக்கம் நிற்கவேண்டும். கிராமத்திலுள்ள எல்லா ஏலங்களில் பஞ்சாயத்துக்களுக்கும் விலை கூறுவதற்கும், சாமான்களை வாங்குவதற்கும் சுதந்திரம் கிடைக்க வேண்டும். பஞ்சாயத்துக்களின் எஸ்டிமேட்டுகள் லோகல் போர்ட்ஸ் இன்ஸ்பெக்டரின் அனுமதியை நாடக்கூடா. ஜில்லா போர்டு பிரசிடெண்டின் அனுமதி போதுமென்று கருதப்படவேண்டும். ஓட்டுரிமை ஜாப்தா தயாரிக்கும் அதிகாரிகள் கிராமப் பஞ்சாயத்தின் அபிப்பிராயத்தையும் கவனிக்கவேண்டும்.

ரஸ்தாக்கள் அமைப்பது ஜல சப்ளை செய்வது சுகாதாரத்தைக் கவனிப்பது இவைகளோடு பஞ்சாயத்தார்களின் வேலைகள் நின்று விடவில்லையென்று மிஸ்டர் சுப்பா ராவ் அவர்களை ஞாபகப்படுத்தி யிருக்கின்றார். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பித்தல், முதிர்ந்தோர்களின் கல்வி, வைத்திய உதவி யளிப்பது போன்றவைகளும் அவர்களின் கவனத்திற்குள்ளாகவேண்டும். இந்த வேலைகளுக்காக பஞ்சாயத்துக்கள் ஒன்று சேர்ந்து ஐந்து கிராமங்களுக்கு திறாணியுள்ள ஒரு கிராம ஊழியனை நியமிக்கவேண்டுமென்று பஞ்சாயத்துக்களை அவர் வேண்டிக் கொண்டார். பயனற்ற நவீன காலத்து பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாக ஜில்லா போர்டாரோ அல்லது வேறு அதிகாரிகளோ கிராம ஊழியர்களுக்குப் பயிர்ச்சி யளிக்கப் பள்ளிக்கூடங்கள் அமைக்கவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

விவசாயிகளின் சங்கங்கள்—அவைகளின் தேவை.*

இந்திய விவசாயின் நிலைமை மிகவும் பரிதாபகரமாகவிருக்கின்றது. யான் சென்னை சட்டசபை அங்கத்தினராகவிருக்கும்பொழுது இதை நன்குணர்ந்தேன். விவசாயின் கஷ்டங்கள் அநேகம். ஆனால் அவைகள் என்னென்னவென்று எடுத்துக் கூற அவனுக்கு திராணியில்லையென்பது மிகவும் விசனிக்கவேண்டிய ஒரு உண்மையாகும். சட்டசபை மெம்பர்களில் எத்தனை பேர்கள் அவனிடம் சென்று அவன் படும் கஷ்டங்களை கேட்கின்றனர்? அவர்களின் எண் மிகவும் குறைவே. இவர்களில் சிலருக்கு நன்மைசெய்யவேண்டுமென்ற அவா உண்மையாகவிருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு அதற்குவேண்டிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் போவது அவர்களுக்கு அசாத்தியமான காரியமாகும். கிராமங்களில் விவசாயிகளின் சங்கங்கள் ஒன்றுமேகிடையா. எப்பொழுது, யாருடன், தனது குறைகளை கூறவேண்டுமென்று விவசாயிக்குத் தெரியாது. அவனுக்கு வேண்டி நானே சில சமயங்களில் பெட்டிஷன்கள் எழுதிக்கொடுத்திருக்கிறேன். அவைகளை அச்சிடவும் செய்திருக்கிறேன். கிராமவாசிகளின் ஒப்பந்தங்களை வாங்கி இந்த பெட்டிஷன்களை அனுப்பவேண்டிய அதிகாரிக்கனுப்பியிருக்கிறேன். இவ்விதம் வேலைசெய்ய எல்லா அங்கத்தினர்களுக்கும் முடியாது. இப்பொழுதுள்ள நிலைமை நீடிக்குமானால், சுயராஜ்யம் கிடைக்கிலும், அதன் பயன் மிக்கக்குறைவாகவே இருக்கும். சுயராஜ்யம் கிடைக்கும்பொழுது இக்கஷ்டங்களொன்றும் பறந்துபோய்விடாது. இப்பொழுது போலவே சுயராஜ்யத்திலும் அரசாங்கமிருக்கும்; அதிகாரிகளும் இருப்பார்கள். விவசாயியின் கஷ்டங்களும் இருக்கும். ஆனால் ஒருகால் அவை குறைந்திருக்கலாம். கஷ்டங்களை நீக்குவதற்கல்லாவிடினும், அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக்கொள்ளவாகிலும் விவசாயிகள் ஊக்கத்துடன் வேலைசெய்யவேண்டும். அவர்களின் முன்னேற்றம் அவர்களின் உற்சாகத்தைப் பொறுத்திருக்கின்றது. ஆகலால் ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளின் சங்கம் அமைக்கப்படின், அவர்கள் அதிகமாக வேலைசெய்யக்கூடும். கிராமச் சங்கங்களின் பிரதிநிதிகளால் தாலுகா சங்கமும், தாலுகாச் சங்கங்களின் பிரதிநிதிகளால் ஜில்லா சங்கமும் ஸ்தாபிக்க சாத்தியமாகும். இச்சங்கங்களின் உதவியோடு சட்டசபை அங்கத்தினர்களுக்குச் சரியான வேலைசெய்ய சாதிக்கும். அப்பொழுது விவசாயி தனது உண்மையான பலம் எவ்வளவென்று அறிந்துகொள்வான். அதிகாரிகளும் மனம் வந்ததுபோல் நடக்கப் பயப்படுவார்கள். பார்டோலி கதையும் கிராம சங்கங்களின் சக்தியையே வெளியாக்குகின்றது அதிகாரிகள் அறியாமையாலோ அல்லது வேண்டுமென்றோ பொய் யாதாஸ்துக்கள் எழுதுவார்களானால் கிராமச் சங்கங்களாலேயே அவைகள் இன்னவிதமென்று அதிகாரத்துடன் எடுத்துக் கூறமுடியும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தனி மனிதனால் ஒன்றும் செய்ய இயலாது.

இதை உதாகரிக்க கர்னூல் ஜில்லாவிலுள்ள மார்க்காபுறத்தில் கிடைத்த எனது அனுபவத்தை இவ்விடத்தில் எடுத்துக்கூறுவேன். அவ்விடத்து கர்ணம்

*அனந்தப்பூர் ஜில்லாவிலுள்ள தர்மாவரம் என்ற விடத்தில் நடந்த விவசாயிகளின் மாகாண மகா நாட்டில் மிஸ்டர் ஜி. ஹரிசர்வோத்தம ராவு செய்த பிரசங்கத்தின் சில பாகங்கள்.

மேலதிகாரிக்கு யாதாஸ்து அனுப்பியபொழுது பயிரின் ஸ்திதியைப்பற்றி எழுதியிருந்தார். ரூபாயொன்றுக்கு ஓரணாமேனிதான் கிடைக்குமென்று அவர் அபிப்பிராயப்பட்டார். உயர்தர உத்தியோகஸ்தர்கள் இதை கவனிக்கவில்லை. ஆதலால் கால (weather) யாதாஸ்தில் இதை அவர்கள் குறிப்பிடவில்லை. ஜனங்களின் கோரிக்கையின்மேல் நான் தாலூகா முழுதும் சுற்றிப்பார்த்தேன். அவர்களின் ஸ்திதியும் துக்ககரமாகவே இருந்தது. அப்பொழுது அறவைஆய்விட்டது. நிலங்களிலுள்ள பயிரடிக் கட்டையையும், களத்திலுள்ள வைக்கோலையும், ஒன்றுமில்லாத பத்தாயங்களையும் தவிர வேறொரு அத்தாட்சியும் கிடையாது. ஆனால் இவைகள் உண்மை ஸ்திதி என்னவென்பதை காட்டிக்கொடுத்தன. இந்த ஸ்திதிகளை இலாகா மெம்பரின் கவனத்திற்கு கொண்டுவந்தேன். உடனே தூங்கிக்கொண்டிருந்த சில அதிகாரிகள் விழித்துக்கொண்டனர். கர்ணத்தின் யாதாஸ்தில் குறிப்பிட்டிருந்த ஒரு அணா ஆறு அணாவாக சுயமாகவே மாறிவிட்டது. இதற்காக அந்த கர்ணத்தின் மேல் புகார் சொல்லலாமா? பாவம்! பெரிய உத்தியோகஸ்தர்கள் அவனை வற்புறுத்தும்பொழுது அவன் என் செய்வான்? மழையைப்பற்றிய யதாஸ்தின் உதவியன்றி விவசாயின் பரிதாபகரமான ஸ்திதியை தெளிவாக்க வேறொரு வழியையும் நான் கண்டிலேன். பெரிய உத்தியோகஸ்தர் யான் கூறியதை ஒப்புக்கொள்ள இசைந்தார். ஆனால் என்ன செய்வது? இதற்குள் வெகு நாட்கள் கழிந்துவிட்டன. அவரின் உதவியால் கதியற்றவர்களுக்கு வேலை கொடுக்க ரூபாய் 90,000 மாத்திரம் வாங்கிக் கொடுக்க எனக்கு சாதித்தது. இந்த அனுபவத்தை இவ்விடத்தில் கூறியதின் உத்தேசம் ஒன்று தான். கிராமங்களில் விவசாயிகளின் சங்கங்கள் இருந்தாலன்றி ஒருவன் மனது எவ்வளவு இரக்கமுடையதாகவிருந்தாலும் சரி, ஒருவன் வேலை செய்ய எவ்வளவு தயாராகவிருந்தாலும் சரி, இம்மாதிரி சந்தர்ப்பங்களில் விவசாயிக்குப் போதுமான உதவியளிக்க முடியாது. இதற்கேற்ற வழி ஒன்றே உண்டு. அதாவது ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளின் சங்கங்கள் அமைப்பதே.

அடக்கம்.

		பக்கம்.
1.	பத்திராதிபர் குறிப்புகள்	247
2.	லோகல் போர்டுகளைப்பற்றிய விஷயங்கள்	256
3.	கிராம அபிவிருத்தி நிதி	258
4.	சர்க்கார் உதவிப் பணத்தை பங்கிடும் முறை	258
5.	ஆந்திர மாகாண விவசாயிகளின் சங்கம்	260
6.	நாமக்கல் ஸப் ஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டி ஆட்சி ரிபோர்ட் ...	263
7.	நத்ரம்பள்ளி பஞ்சாயத்தில் கட்டாய ஆரம்பக் கல்வி ...	269

சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு	ரூபாய்	2.
மற்றவர்களுக்கு ...	,,	3.
தனிப்பிரதி ...	அணா	4.

28 AUG 1931

விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,
ராயப்பேட்டை, சென்னை.

பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.